பக்கங்கள்-16 | 17.மார்ச்.2023 | விலை-50.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 425



## தமிழீழ விடுதலை அரசியலில் அன்ரன் பாலசிங்கம்



## மீண்டும் நிறைவேற்று அதிகாரத்தை மக்கள் ரணிலிடம் ஒப்படைப்பார்களா?



## தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றுபடவேண்டும் – இல்லையேல் ஆபத்து

# தமிழீழ விடுதலை அரசியலில் அன்ரன் பாலசிங்கம்



"தேசத்தின் குரல்" மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 17 ஆம் ஆண்டு வீரவணக்க நாள் தமிழர் தேசம் எங்கும் அனுசரிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் அரசியல் நகர்வுகளில் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களிற்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டு 2006ம் ஆண்டு 12ம் மாதம் 14ம் திகதி ஆயிரம் ஆயிரம் மாவீரர்களுடன் இணைந்து தமிழீழத்தின் தேசத்தின் குரலாக தலைவர் அவர்களால் மதிப்பளிக்கப்பட்டு தமிழீழ விடியலில் வரலாறானார்.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவு தமிழீழ மக்கள், விடுதலைப்போராட்ட பாதையில் இன்றும் நிரப்பமுடியாத இடமாக காணப்படுகின்றது. தமிழீழ தேசியத்தலைவர் அவர்களால் ஆழமாக நேசித்த ஒரு விடுதலை வீரனாக அன்ரன் பாலசிங்கம் அவர்கள் காணப்பட்டார். தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் தொடக்க காலத்தில் இருந்து செயற்பட்ட பாலா அண்ணா விடுதலை இயக்கத்தின் பிதாவாக காணப்பட்டார்.

தலைவர் அவர்களுக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் உலக போராட்ட வரலாறுகளை எடுத்துக் கூறி பல்வேறு நாடுகளின் அரசியலாளர்களின் தொடர்புகளை ஏற்படுத்தி அதனூடாக விடுதலைக்கான உழைப்பினை மேற்கொண்டதில் தேசத்தின் குரல் முதன்மையானவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தனது துணைவியினையும் இணைத்துக் கொண்ட ஒரு மூத்த அரசியல் போராளியாக, ஒரு மதியுரைஞராக, தத்துவ ஆசிரியராக, தலைவர் அவர்களுக்கு அருகில் இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்துள்ளார்.

பரந்து வாழும் உலகத்தில் தமிழ் மக்கள் பெருமைகொள்ளும் வகையில் அரசியல் உலகிலும் இராஜதந்திர உலகிலும் முடிவில்லா சாதனை புரிந்து தமிழ் மக்களின் சுதந்திர போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்திய பெரும் போராட்டப் பணிக்காக தலைவர் அவர்கள் தேசத்தின் குரல் என்ற மாபெரும் மதிப்பினை வழங்கி மதிப்பளித்தார். தாயகத்தில் போர் உக்கிரம் பெற்ற காலகட்டப் பகுதிகளில் தாயகத்தில் இருந்துகொண்டு அரசியல் செயற்பாடுகளை நகர்த்த முடியாத சூழலிலும் உடல் நலத்தினை கருத்தில் கொண்டும் கடற்புலிகளின் சிறப்பு பாதுகாப்புடன் கடல் வழியாக பன்னாட்டிற்கு சென்று பன்னாடுகளுக்கு தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளை எடுத்துக்கூறி, 2002ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசுடன் ஏற்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டிற்கு முதன்மை வகித்தார். ஸ்ரீலங்கா அரசின் பல மறைமுக எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் விடுதலைப் பற்றுக்கொண்டவனாக அன்று இரணைமடு குளத்தில் விமானத்தில் வந்திறங்கி தனது அரசியல் சக்தியினை ஸ்ரீலங்கா அரசிற்கு தெரியப்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து தாய்லாந்து தொடக்கம் ஜெனீவா வரையான பலசுற்று பேச்சுவார்த்தைகளில் பங்கெடுத்து தமிழ் மக்களின் அரசியல் வேட்கையினை உலகிற்கு எடுத்துக்கூறி ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுக்களில் ஈடுபட்டு பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வன் அவர்களை தனக்கு அடுத்த அரசியல் செயற்பாட்டாளனாக வளர்த்தெடுத்த பெருமை அன்ரன் பாலசிங்கம் அவர்களை சாரும். தமிழீழ மண்ணில் பல கல்விக் கூடங்களையும் அரசியல் நிர்வாக அலகுகளின் அலுவலகங்களையும் திறந்து வைத்தும் பல போராளிகளுக்கு அரசியல் வகுப்புக்களை கற்பித்த எங்கள் ஆசானாக என்றும் அவர் எங்கள் மனங்களில் நிறைந்திருப்பார்.

ஸ்ரீலங்கா அரசு போர்நிறுத்த மீறல்களை மேற்கொண்டு தமிழர் தாயகப் பரப்பில் அத்துமீறிய போர் நடவடிக்கையினை மேற்கொண்ட காலகட்டப் பகுதியான 2006ம் ஆண்டு காலகட்டத்தில் உடல் உபாதையால் பாதிப்புற்ற அன்ரன் பாலசிங்கம் அவர்கள் 2006ம் ஆண்டு மார்கழி 14ம் திகதி தமிழ் மக்களை விட்டு பிரிந்து சென்றார்.

தாய்மண்ணின் விடியலில் நாளும் அயராது உழைத்து தலைவனின் நினைவிலும், தமிழ் மக்களின் நெஞ்சங்களையும் நிறைத்து மாவீரர்களுடன் தமிழீழக் காற்றில் கலந்த தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர், தத்துவாசிரியர் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எம்மைவிட்டகன்று ஆண்டுகள் பல ஓடி மறைந்துவிட்டன. ஆனால், அவரது நினைவுகளும் ஆளுமைகளும் எம்மை விட்டு என்றும் அகலா. ஒரு பத்திரிகையாளனாக, பொதுவுடைமைச் சித்தாந்தவாதியாக, தத்துவாசிரியராக, விடுதலைப் புலிகளின் ஆலோசகராக, தலைமைப் பேச்சாளராக பல பரிமாணங்களை எடுத்தவர் எங்கள் பாலா அண்ணா. எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழ் மக்களினுடைய தேசிய விடுதலைப் போராட்டம் குறித்து, அதன் நியாயப்பாடுகளை சர்வதேச அரங்கில், எடுத்துச்சென்று வாதிட்ட, தமிழர்களின் விடுதலைக்காகப் பாடுபட்ட ஒரு போராளி அவர். கொடிய நோய் தன்னைத் தாக்கியிருந்ததையும் பொருட்படுத்தாமல், தன் இறுதி மூச்சு அடங்கும் வரை, எங்கள் தேசத்தின் குரலாக அவர் ஒலித்தார். எங்கள் மக்களின் விடுதலைக்காக அவர் இறுதிவரை உழைத்தார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில், பாலா அண்ணாவின் வாழ்க்கை ஒரு பாடம். படித்தவர்கள், அறிவுஜீவிகள், உயர் பதவி வகிப்போர், புலம்பெயர்ந்த தேசங்களில் கல்வி கற்கும் இளையோர், உயர்நிலைகளை நோக்கி முன்னேறும் இளம் சமூகத்தினர் என எல்லோருக்கும் பாடமாக தன் வாழ்க்கையை வாழ்ந்து காட்டியிருக்கின்றார் பாலா அண்ணா. 1979ம் ஆண்டு, தமிழகத்தில், தலைவர் அவர்களைச் சந்தித்த நாள் தொடக்கம், தலைவரின் கருத்தோடு ஒன்றிக் கலந்து, இறுதிவரை தலைவருக்கு ஆதரவாக, அன்பு கொண்ட அண்ணனாக, உடன் இருந்து தேசியத்தலைவரின் பணிச் சுமையைத் தானும் பங்கிட்டுக்கொண்டவர். தான் மட்டுமன்றி, தன் வாழ்க்கைத் துணையாக வந்திணைந்த, அவுஸ்திரேலியப் பெண்மணியான அடேல் அம்மையாரையும், எமது விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கும் பெண்மணியாக பக்குவப்படுத்தி, எமக்காக, தம்பதியினராக, அனைத்து இன்ப துன்பங்களையும் எமக்காகப் பங்கிட்டு வாழ்ந்தார். மேல்நாட்டு வாழ்க்கையை உதறித்தள்ளிவிட்டு, தாய்நாட்டு விடுதலைக்காக உயிர்கொடுத்துப் போராடும் போராளிகளோடு போராளிகளாக மோசமான ஆபத்துகள் நிறைந்த நெருக்கடியான தாயக வாழ்க்கையை, பாலா அண்ணாவும் அடேல் அம்மையாரும் விருப்புடன் ஏற்றுக்கொண்டு வாழ்ந்த வாழ்க்கை உண்மையில், எமக்கான பெரும் பாடம். எளிமையாக வாழ்ந்தார். உயர்ந்த சிக்கல் நிறைந்த, விளங்கிக்கொள்ள சிரமமான தத்துவங்களை, சித்தாந்தங்களை எளிய தமிழில் எமக்கு பரிச்சயப்படுத்தினார். உலகத்தின் ஆதரவை எமது பக்கம் திருப்ப அதிகளவில் பாடுபட்டார். போராடினார். இன்று அவரது இடம் வெற்றிடமாகவே இருக்கின்றது.

புலம்பெயர்ந்த மண்ணில் வாழும் இளைய சமூகத்தினருக்கான அழைப்பை பாலா அண்ணாவின் வாழ்க்கை ஏற்படுத்தியிருக்கின்றது. எமது தாயக விடுதலையை நேசிக்கவும், அதற்காக அர்ப்பணிப்பான வாழ்க்கையை வாழவும் பாலா அண்ணாவின் வாழ்க்கை கற்றுத்தருகின்றது. தேசியத்தலைவரின் வேண்டுகோள் புலம்பெயர்ந்த இளைய சமூகத்தை நோக்கியே முன்வைக்கப்பட்டிருக்கின்றது. பாலா அண்ணாவின் வாழ்க்கையை ஒரு அரும்பெரும் பாடமாக ஏற்றுக்கொண்டு, கர்வமற்ற, தன்னடக்கமான, சுயநலமற்ற அர்ப்பணிப்பு மனோபாவத்துடன் தேசப்பணியாற்ற புலம்பெயர் இளைய சமூகம் தன்னைத் தயார்படுத்தவேண்டும். பாலா அண்ணாவின் நினைவுநாளில், இந்த நிலையை எட்ட எம்மைத் தயார்படுத்துவோமாக.

தேசத்தின் குரல் பாலா அண்ணா
இன்று உன்னை இழந்து நிற்கிறோம்.
கொடு நோயிலும் வலியிலும் நீ நடத்திய
தமிழீழ மக்களுக்கான விடுதலை
வேள்வியில்
உன் அறிவுத்திறனை பயன்படுத்தி
தமிழீழத்திலும் சரி
புலம் பெயர் நாடுகளிலும் சரி
இலண்டனில் இருந்துகொண்டு
தமிழீழ மக்களின் விடிவிற்காய்
குரல் கொடுத்தாயே!
உங்கள் அறிவின் ஆளுமையால்
எங்கள் தேசத்தின் விடுதலைக்கான
உரிமைக் குரலாய், மக்களின் குரலாய்
ஊடகவியலாளராய், தேசத்தின் குரலாய்
தலைவரின் அண்ணனாய்
தலைவரின் ஆலோசகராய்
எப்போதும் மக்களுக்காய்
மக்கள் படும் துன்பங்களுக்கு
முடிவு கட்டவேண்டும் என்று
இரவு பகல் பாராது பணியாற்றினாயே!
விடுதலைப் புலிகளை
பயங்கரவாதிகள் என்றவர்களை
இல்லை அவர்கள் போராளிகள்
உரிமைப் போர் செய்கின்ற
விடுதலைப் போராளிகள் என்று
உலகுக்கு உணர்த்தி.
தமிழீழ மக்களின்
தமிழீழ போராட்டத்தை
உலக அரசியல் அரங்கில்
அவர்களுக்கு நியாயப்படுத்தி
நீதி வழங்க வேண்டும் என்று
சூழுரைத்து இயங்கிக் கொண்டிருந்த
மாமனிதன் நீ!
இன்று உன்னை இழந்து நிற்கிறோம்!!!

நீ ஓர் அரசியல் ஞானி
நீ ஓர் இராஜதந்திரி
நீ ஓர் சிந்தனைவாதி
நீ ஒரு மதி உரைஞர்
நீ ஒரு மனிதநேயன்
நீ ஒரு வரலாறு
நீ ஒரு சகாப்தம்

இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். அண்ணே இன்று நீ இல்லை. ஆனால் உன் சிந்தனைகளை நாம் உள்வாங்கி எங்களுடன் நீ இருக்கின்றாய்.
பாலா அண்ணே நீ சாகவில்லை
அண்ணிக்கும் ஆறுதல் சொல்லிக்கொண்டு.
தேசத்தின் குரலே!
மீளாத் துயில் கொள்ளும் அண்ணனே!
தூங்குகிறாயே தூங்கு.
நன்றாகத் தூங்கி இளைப்பாறு.
தமிழ் வாழ் நல்லுலகம்
என்றென்றும் உன் நினைவாக
உனக்கு எங்கள் கண்ணீர் வணக்கங்கள்.
ஈழத்தின் சிங்கம் அன்ரன் பாலசிங்கம்.

"பாலாண்ணையை நான் ஆழமாக நேசித்தேன். விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் ஒரு மூத்த தலைமகனாக பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்றுசேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திரிந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன். மோசமாகச் சுகவீனமுற்று தினம் தினம் சாவோடு போராடியபோதும், தாங்க முடியாத உடல் உபாதைகளால் வருந்தியபோதும், தளர்ந்து போகாத உறுதிப்பாடு அவரிடம் இருந்தது. அவரின் இந்த இலட்சிய உறுதி எனது நெஞ்சத்தைத் தொட்டுநின்றது. அவர் துன்பத்தால் துவண்டபோதெல்லாம் எனது ஆன்மாவும் கலங்கியழுதது.

-தலைவர்-

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## போதைப்பொருள் பாவனையும், விழிபிதுங்கும் பெற்றோரும்

இலங்கை முழுவதும் போதைப் பொருள் என்னும் அரக்கனால் முற்றாக மூடப்பட்டுள்ளது. போதைப்பொருள் நுகர்வோர் மற்றும் போதைப்பொருள் விற்பனையாளர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்பட்ட நிலையில் தற்போது வீட்டுக்கு வீடு, தெருவுக்குத் தெரு என்கிற நிலை ஏற்பட்டுள்ளது. அதன் உச்சக்கட்டமாக தற்போது பாடசாலைகளுக்குள் மிக வேகமாக போதைப்பொருள் பரவி வருகிறது. மாணவர்களை மையப்படுத்தி போதைப்பொருள் விற்பனையாளர்கள் செயற்பட்டு வருவது மிகவும் மோசமான நிலைக்கு எமது நாடும், எமது கல்விச்சமூகமும் தள்ளப்பட்டுள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பு மற்றும் அநுராதபுரம் மாவட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவிகள் போதைப்பொருள் பாவனையில் சிக்கியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதில் மிகவும் வேதனையான விடயம் யாதெனில், அநுராதபுரத்திலுள்ள சில பாடசாலையின் மாணவிகள் போதைப்பொருள் பாவனையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் போதைப்பொருள் வாங்குவதற்குப் பணம் இல்லாமையினால் பணத்தைப் பெறுவதற்காக தம் சக ஆண் மாணவர்களிடம் தம்மை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதாவது பாலியல் ரீதியாகத் தொடர்புகொண்டு அதற்குப் பணமும் பெற்று போதைப்பொருள் வாங்குவதாக தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. இன்று வடமாகாணப் பாடசாலைகளிலும் போதைப்பொருள் உள்நுழைந்துள்ளது. யுத்தம் முடிவுற்றதன் பின்னர் மிக மோசமாக போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதானது எமது தேசம் அதளபாதாளத்திற்குச் செல்வது தடுக்க முடியாமல் போகும்.

போதைப்பொருள் விற்பனை யாளர்களைத் தடுப்பதற்கு கடற்படை, புலனாய்வுத்துறை, பொலிசார், சிவில் அமைப்பினர் என அனைவரும் போராடிவரும் நிலையில், அது கட்டுக்கடங்காமல் செல்வது மிகவும் வேதனையான விடயமாகும். இது சில இடங்களில் பொலிசார், இராணுவத்தினர், அரசியல்வாதிகள் இப்போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு பின்னால் நிற்பது மிகவும் கேவலமான விடயமாகும். அண்மையில் யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து மிகவும் ஆபத்தான செய்தியொன்று வெளிவந்தது. கனடா செல்வதற்காக பல நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் மருத்துவச்சான்றிதழ்பெற வைத்தியசாலைக்குச் சென்றுள்ளனர். அங்கு பரிசோதித்ததில் நூற்றுக்கு நாற்பத்தைந்து விகிதமான இளைஞர், யுவதிகளின் இதயத்துடிப்பு பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன் கல்லீரல் மற்றும் நுரையீரல் பாதிக்கப்பட்டுக் காணப்பட்டதாகவும், சுவாசம் தொடர்பான நோய்கள் தென்பட்டுள்ளதாகவும் அதிர்ச்சியான செய்தி வெளிவந்தது. அவ்வாறானவர்களிடம் மருத்துவர்கள் விசாரித்தபோது, அவர்கள் போதைப்பொருள் பாவனையாளர்கள் என்பதுடன், ஐஸ் மற்றும் ஊசி மூலமாக போதை மருந்துகளை ஏற்றுபவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இதில் யாரை யார் குற்றம் சொல்வது? இதற்குக் காரணம் அரசாங்கமா? அல்லது கண்டும் காணாமல் விடும் பெற்றோரா? பிடித்துவிட்டுக் பணம் பெறும் பாதுகாப்புத் தரப்பினரா? அல்லது சமூகமா? காரணம் யார்? இங்கு ஒருவர் மேல் ஒருவர் குற்றம் சாட்டுவதை விடுத்து, இளம் சமுதாயத்தையும் மாணவ சமுதாயத்தையும் காப்பாற்ற ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். வட–கிழக்கு மாகாணத்தில் இவ்வாறு இளம் சமூகம் அழிந்துகொண்டுசெல்லும் நிலையில் யாருக்காக உரிமை கேட்டுப் போராடப் போகின்றீர்கள். அரசியல் தலைமைகளே! அழிந்துபோகும் இளம் சமுதாயத்தைக் காக்க முன்வாருங்கள்.

# கல்லறைப் பூக்கள்



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

24

ஒரு அமைச்சருடைய கப்பல் இசைக்கருவியுடன், ஓடுதாம். அதுதான் லங்கா முடி என்ற பெயரில் ஓடுதாம். இந்த கப்பல் காங்கேசன்துறைக்குப் போய்ச் சேர 24 மணித்தியாலம் எடுக்குமாம். கடல் கொந்தளித்தா? சிலவேளை 48 மணித்தியாலமும் எடுக்குமாம். 'சிற்றி ஒப் ரிங்கோ' ஒரு இரவிலேயே போய்ச் சேந்துடும்."

முரளி இசைக்கருவி என்றதும், சாத்துக்குத் தங்கும் இடத்திற்கு வாங்கிய கடிதம் தனது கோப்புக்குள் உறங்கிக்கொண்டு இருப்பது ஞாபகத்திற்கு வந்தது. சமூகம் இந்த கடிதத்தைக் கண்டால், சாத்தின் மீது எவ்வாறான பார்வையைச் செலுத்த போகின்றது. இவன் மீது தவறுதலான கண்ணோட்டத்தைக் கொள்ளப்போகின்றது.

"வவுனியாவில் முகாமில் தங்கியிருக்கும் போது, ஒருவர் ஒரு அலுவலகத்தில் கூட்டக்கொண்டு போய் இந்த கடிதத்தைப் பெற்றுக் கொடுத்தார்" – சாத் கடிதத்தை அன்று நண்பர்களாக ஏற்றுக்கொண்ட வின்சனிடமும் முரளியிடம் காட்டினான். வின்சனும் முரளியும் அன்றுதானன், முதல் அறிமுகமான சாத்தின் கடிதத்தைப் பார்த்துவிட்டு, ஒருவரை ஒருவர் அமைதியாக தங்களின் முகங்களைப் பார்த்துக்கொண்டார்கள்.

"மச்சி ஆள் டேஞ்சரானவன் போல" – வின்சனின் முகம் கறுத்தவாறு, முரளியின் பார்வைக்குத் தீன்போட்டது.

"அப்படி கட்சிக்காரன் என்றால், ஏன்டா கடிதத்தைக் கொண்டு இங்கே வரவேணும்?" என்றான், முரளி. மௌனமாக.

இரண்டு நண்பர்களுக்குத் தெரிந்த கடித விவகாரத்தை, தங்களின் மௌனத்தைக் களைந்து, சாத்திடம் வெளிப்படையாக உரையாடியிருந்தால், கடிதத்தின் உண்மை விவகாரம் அவர்களுக்கும் புரிந்திருக்கும் மாணவ சமூகத்திற்கும் சந்தேகம் வந்திருக்காது.

"இந்த கடிதத்தின் அலுவலகம் நிலாவெளி வீதியில் இருக்கு. அங்க போனாலும் விரைவாக, 'டிக்கட்' எடுக்கலாம்." – வின்சன், வஞ்சக சூது அறியாத சாத்திடம் கூறியதும் அவனும் அதை அப்படியே உண்மையென நம்பிக்கொண்டான்.

"ஜெயபிரகாஷ்...ஜெயபிரகாஷ்..."

'டிக்கட் கவுண்டரில்' பெயர் வாசிக்கப்பட்டதும். "அடே கதைக்கிறத நிப்பாட்டிப்போட்டு, அடுத்தடுத்து உங்கட பெயர்தாண்டா கூப்பிடப் போறாங்கள்." – கரங்களில் கடதாசிகளுடன், ஜெயபிரகாஷ் சென்றான்.

கடிதத்தின் விவகாரம் – செய்தி – காட்டுத் தீ போல கூடி நின்ற மாணவ பயணிகள் மத்தியில், 'கட்சியின் கடிதத்துடன் 'மெடிக்கல் பெக்கல்டி' மாணவன் ஒருவன் வந்திருக்கான்' – பரவியது.

ஜெயபிரகாஷின் அழைப்புக்குரல் கேட்ட, பின் வரிசையில் அலட்டிக் கொண்டிருந்த வின்சன், முரளி, சாத் முதல் பத்து நபர்கள் அடுத்து அடுத்து செல்ல உஷாராகினர்.

வின்சனுக்கும் முரளிக்கும் சாத்துக்கும் இடையேயான பேச்சில் சற்று இனம் புரியாத அமைதி நிலவியது. 'டோக்கன்' எடுக்கும் 'பிஷியில்' அதுவொன்றும் பெரிதாகப் புலப்படவில்லை.

அவர் அவர் கவுண்டரில் 'டோக்கன்' எடுத்துக்கொண்டு அவர் அவர் பாட்டுக்கு கூட்டமாகவும் அமைதியாகவும் கலைந்து சென்றனர்.

சாத் தன்னுடைய 'டேன்' வந்ததும் 'டோக்கனை' எடுத்துக்கொண்டு தனது கோப்புக்குள் கடிதங்களை அடுக்கியவாறு 'கவுண்டருக்கு' சற்று வெளியில் இறங்கி அவனுடன், உரையாடிய வின்சனையும் முரளியையும் ஓர் இடத்தில் அசையாது வேர் கொண்டு நின்ற அரச மரம் கடற் காற்று வீசும் வேகத்தைத் தனது மேனியால், தடுப்பதைப் போல விழிகளால், மட்டும் அவர்களைத் தேடினான். அவர்கள் அந்த இடத்தில் எங்குமே அவனது கண்களுக்குத் தென்படவில்லை. மறுநாள் எப்படியும் அவர்கள் வருவார்கள் தானே?. சாத், தான் சந்திப்பதாய் மனத்தைத் தேற்றிக் கொண்டான்.

கடிதத்தின் விவகாரம் – செய்தி – அங்கு நின்ற மாணவர் – மாணவியர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஓதப்பட்டமையால், சாத் அங்கு வித்தியாசமான மாணவனாக அவைவராலும் பார்க்கப்பட்டான். அதை அவன் அறியவுமில்லை. யாரும் தெளிவுபடுத்தவுமில்லை. அவர்கள் கூறிய விடயம் ஞாபகத்திற்கு வரவே தன்னுடைய நடைப் பயணத்தை நிலாவெளி அலுவலகத்தை நோக்கி தனியாக ஆரம்பித்தான். அவன் பின்னால், பெரிய ஒரு வீரனைப் பிடிப்பதற்கு இரகசிய சேனைப் படை செல்வதைப் போல, தமிழ் இயக்கத்தின் புலனாய்வுத்துறைச் சென்றது.

கப்பல் 'டிக்கட' எடுக்கும் இடத்தைப் போல, இங்கும் சனக்கூட்டம் அலைமோதியது. அலுவலகத்தின், முன் வெளிவாயிலும் பின் பக்கங்களிலும், பலகைகளினாலும் தண்டவாளங்களினாலும் மண் மூட்டைகளினாலும் சுற்று மதிலின் உயரத்தைப் போல ஐந்து மடங்கு உயரத்தில் மூன்று சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு, ஒவ்வொன்றிலும் ஒரு இராணுவ வீரன் விழுக்காடு, கரங்களில் 'ஏகே47' வினை ஏந்திய வண்ணம் நின்றனர். முன் வாயிலில் காவலுக்காக உயரத்தில் நின்ற சகோதர சீருடையன் அலுவல கத்திற்குள் வரிசை வரிசையாக செல்லும் மகளிர் அணியினரைப் பார்ப்பதும் பல்லிளிப்பதுமாக பொழுதைப் போக்கினான்.


வவுனியா அலுவலகத்தில் காட்சியளித்ததைப் போல இவ் அலுவலகத்தின் முன்னாலும் பெரிய வீணைப்படத்துடன், மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்னும் வாசகங்களுடன், காட்சியளித்தது. சாத், சற்று வேறுபாடு கண்டான். அங்கு முன்னால், சவரம் செய்யாத முகத்துடன் அமைச்சர் என்று எழுதிய, பதாதை இல்லை" இங்கு அவ்வாறு பெரிய பதாதைகள் முன் வாயிலிலும் உள்ளேயும் பலவற்றைக் காணலாம்.

அலுவலகத்தின் உள்ளே சென்ற, சாத் சுற்றும் முற்றும் பார்த்தான். ஐம்பதிற்கும் மேற்பட்ட நபர்கள் கதிரைகளிலும் நீள வாங்குகளிலும் அமர்ந்திருந்தனர். சாத்துக்கு அறிமுகமான முகங்கள் எதுவும் அவனுக்குத் தென்படவில்லை.

அறுபது வயது மதிக்கத்தக்க நபர், சாத்தைப் பார்த்து, "தம்பி என்ன விடயம்?" என்றவாறு ஒரு கதிரையைத் தூக்கி வந்து, அவன் அருகில் வைத்து விட்டு, "பொறுப்பாளர் வெளியில் போயிருக்காரு வரட்டும் இந்தாங்க இதில் உக்காருங்கள்" – தனது தலையைச் சொறிந்தார்.


"கப்பல் 'சீப் டிக்கட்' சம்பந்தமாக." – இருக்கையில் அமர்ந்தான்.
"நீங்கள் பக்கத்தில் உள்ள கச்சேரியில் பதிஞ்சிங்களா?"
"ஓம்"
"இரண்டு மூன்று கிழமையால், வரும்தானே?"
"இல்லை, 'அங்கிள்' கச்சேரியில் 'டோக்கன் எடுக்கேக்க, பல்கலைக் கழகத்திற்குப் போகும் புதிய நண்பர் ஒருவர் சொன்னார், இஞ்ச போனா 'குயிக்கா' எடுக்கலாம் அதுதான் வந்தேன்."
"நீங்களும் 'கெம்பஸா'?"
"ஓம்"
"அப்ப இந்த 'அப்பிளிகேசனை' நிரப்பித் தாங்கோ" – ஒரு மஞ்சள் நிறக் கடதாசியை நீட்டினார்.

பூக்களை மணந்தால் வாடும் சாத்துக்கு விண்ணப்பப் படிவத்தைப் பார்த்ததும் முகம் வாடியது. இருந்தும் பெயர், வயது, பால், வதிவிட முகவரி, செல்லும் முகவரி, கப்பல் 'டிக்கட்டுக்கு' பணம் செலுத்த முடியுமா, முடியாதா?, தொலைபேசி இலக்கம், தற்போது தங்கியிருக்கும் முகவரி, செல்வதற்கான காரணம் முதலிய விடயங்களில் சாத்துக்கு, விண்ணப்பப் படிவத்தை வாங்கியதும் தெட்டத்தெளிவாக அவனது கண்களுக்குப் பளீச்சென்று தெரிந்தது, பணம் செலுத்த முடியுமா, முடியாதா? என்பது. வயதான அந்த நபரைப் பார்த்து,
"அங்கிள்' இஞ்ச கப்பல 'டிக்கட்' காசு இல்லாம எடுக்கலாமா?"



தொடரும்...

# தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றுபட வேண்டும் - இல்லையேல் ஆபத்து



யுத்தத்திற்குப் பின்னரான அரசியலிலும் சரி, முன்னரான அரசியலிலும் சரி தமிழ்த் தரப்புக்கள் தமது அரசியல் நடவடிக்கைகளை தமிழ் மக்கள் மத்தியில் செய்து வந்தனர் என்பது வரலாறு. ஆனால் கருத்து முரண்பாடுகள் காரணமாக யுத்தத்திற்குப் பின்னர் தமிழ் மக்களுக்காக தலைமை தாங்கிய கட்சிகள் சின்னாபின்னமாக சிதறிக்கிடக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் 22 பாராளுமன்ற ஆசனங்களை தம்வசம் வைத்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 15, 10 ஆக குறைந்துள்ளது. தற்போது கூட்டமைப்பு என்ற ஒன்று இல்லை. ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழரசுக் கட்சி என்பன தனித்தனியே தான் செயற்படுகின்றன. ஆனாலும் புதிய கூட்டமைப்பு என்ற ஒன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயகப் போராளிகள் என ஒன்றிணைந்தன.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் எதிர்வரும் காலங்களில் தமது கட்சிகளைப் பலப்படுத்துவதற்குப் பிரயாசப்படுவார்கள். அதனைத்தான் தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் செய்து வருகின்றன. வடமாகாண சபையின் முதலமைச்சராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையே சி.வி.விக்னேஸ்வரனை இனங்காட்டியது. அதன் பின்னர் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் இடையில் கருத்துவேறுபாடுகள் உச்சக்கட்டத்தை தொட்ட நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் வெளியேறினார். பின்னர் தனக்கென ஒரு கட்சியை உருவாக்கி பாராளுமன்றத் தேர்தலில் அக்கட்சி ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியது. தற்போது சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். அதே உத்வேகத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்த அரசாங்கமும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் மும்முரமாகச் செயற்பட்டன. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கட்டமைப்பு உடைக்கப்பட்டது. அதனடிப்படையில் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி கட்சி இரு ஆசனத்தையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரு ஆசனங்களையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாழில் ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது. கிழக்கினைப் பொறுத்தவரை ரெலோ கட்சி ஒரு ஆசனத்தையும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றி, பிரிந்துசென்ற வியாழேந்திரன் அவர்களும் பாராளுமன்ற உறுப்பினரானார். இதனால் தமிழரசுக் கட்சி பெரும் பின்னடைவைச் சந்தித்தது.

இந்த நிலைமைக்குக் காரணம் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒன்றாக இருந்த கட்சிகளை தனியே போட்டியிடுமாறு முரண்பாடுகளைத் தோற்றுவித்தமையே ஆகும். கறைபடியாக கட்சியாக தமிழரசுக் கட்சி தன்னை தொடர்ந்தும் இனங்காட்டுவதற்காக சுயநலத்தோடு செயற்பட்டு வருவதன் காரணத்தினால் இன்று தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கும் பாரிய நெருக்கடி நிலைமை எழுந்துள்ளது. கடந்த காலங்களில் ஒற்றுமை பற்றிப் பேசிய மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சிக்கு ஏற்ற தலைவர் இல்லை என்ற காரணத்தினாலும், மூன்று முறை தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்ததன் அடிப்படையிலும் அடுத்த தலைமுறையினருக்கு அப்பதவியினை விட்டுக்கொடுப்பதாக அறிவித்து, தேசியப்பட்டியல் ஊடாகத் தெரிவுசெய்யப்பட்ட சுமந்திரன் அவர்களும், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் ஊடாகத் தெரிவான சிறிதரன் அவர்களும், தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்று தற்போது போட்டியிடுகின்றனர்.

தமிழரசுக் கட்சியின் தற்போதைய செயலாளர் ப.சத்தியலிங்கம் அவர்களும் டி.யு.குணசேகரவினுடைய சிறிலங்கா கொமியூனிஸ்ட் கட்சியில் இருந்து தமிழரசுக் கட்சிக்கு உள்நுழைந்தவர் தான். அடிப்படையில் இவர்கள் யாரும் தமிழரசுக் கட்சியினர் அல்ல. கூடுதலாக தமிழரசுக் கட்சியில் இருப்பவர்கள் வந்தேறிகளாவர். ஆனால் ஒரு கட்டத்தில் இரத்தக்கறைபடிந்த ஆயுதக் கட்சிகளுடன் பயணித்த தமிழரசுக் கட்சி அதன் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகிற காரணத்தினால் விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் அக்கட்சியில் இருந்து ஆயுதக் கட்சிகளை கொஞ்சம் கொஞ்சமாக ஓரங்கட்ட ஆரம்பித்தனர். அந்த ஓரங்கட்ட ஆரம்பித்ததன் அடிப்படையில் இன்று தமிழ் இனத்திற்கான ஒற்றுமை என்பது சின்னாபின்னமாகிக் கிடக்கின்றது. ஒவ்வொரு கட்சித் தலைவர்களும் வெவ்வேறு திசைகளில் பயணிக்கிறார்கள். தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டுடன் பயணித்த இவர்களுள் இன்று பலர் அரச கைக்கூலிகளாகச் செயற்படுவது என்பது மனவேதனையளிக்கின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது இல்லை. அதனை இல்லாமல் செய்வதே அரசின் பிரதான நோக்கம். அந்த அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வலது கையாகச் செயற்பட்டு வந்த சுமந்திரன் அவர்கள் விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மிகக் கச்சிதமாக பிரிவடையச் செய்தார். நீண்டகாலமாக அதனையே அரசாங்கமும் எதிர்பார்த்தது.

இன்று தமிழரசுக் கட்சி தனது தனித்துவமான பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றது. இனி தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடுவது சாத்தியமா என்பதை சிந்தித்துப் பார்த்தால் நிபந்தனைகளின் அடிப்படையில் செல்லக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. மூன்று ஆசனங்களை வைத்திருக்கின்ற ரெலோ கட்சியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து இறுதியாக பிரிந்து வந்தது. ரெலோ கட்சியினுடைய தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தொடர்ந்து பயணிப்பார் என எதிர்பார்த்த தமிழரசுக் கட்சிக்கு DTNA தகுந்த பாடத்தை வழங்கியிருக்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் எடுத்த இத்தகைய முடிவானது மக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றிருக்கிறது. அதுபோன்று ஏனைய கட்சிகளும் அதிலிருந்து விலகி ஒரு கூட்டமைப்பை அமைத்திருக்கின்றன. இந்தக் கூட்டு வெற்றி பெறுமா இல்லையா என்பதை தேர்தலின் பின்னரே உறுதியாகக் கூற முடியும். தமிழரசுக் கட்சி கிழக்கில் ஒரு ஆசனத்தையும் வடக்கில் இரு ஆசனங்களை மாத்திரமே கைப்பற்றக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்த கூட்டுக் கட்சிகளை பிளவுபடுத்தியதே. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என ஒரு பழமொழி இருக்கிறது. ஒற்றுமையை சீர்குலைக்கும் நோக்கில் அரசாங்கம் வெற்றியும் கண்டுள்ளது.


இது இவ்வாறிருக்க, தமிழினத்திற்கான வட-கிழக்கு இணைந்த தாயகம் இல்லாதுபோனால் நவீன முறையில் ஒரு யுத்தம் ஆரம்பிக்க வாய்ப்பும் இருப்பதாக அண்மைக்காலங்களில் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. 40 வருடங்களுக்குப் பின்னர் எவ்வாறு இஸ்ரேலுக்குள் உள்நுழைந்து ஹமாஸ் தாக்குதல்நடத்தியதோ, அதேபோன்றதாகஒரு தாக்குதலுக்கு புலம்பெயர் விடுதலைப்புலிகள், புலம்பெயர் அமைப்புக்கள் தயாராக இருப்பதாக செய்திகள் வெளிவந்தன. இம்முறை மாவீரர் தின உரையும் ஒரு டம்மியாக வெளியிடப்பட்டதென்றும் நிஜத்தில் உரையாற்றுகின்ற நாள் வெகுதொலைவில் இல்லை என்றும் அதன் செயற்பாட்டாளர்கள் கருத்தும் வெளியிட்டுள்ளனர். நிழல் மாவீரர் தின உரைக்கே அரசும் ஏனைய தரப்புக்களும் ஆட்டம் கண்டுள்ளனர் என்பது உண்மை. ஆனாலும் இங்கிருக்கக்கூடிய தமிழ்த் தரப்பு உரிய முறையில் அஹிம்சை வழியிலான போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமா என்பது பாரிய கேள்வியை எழுப்பியுள்ளது.


தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்ப்பதற்கான ஒரு தலைமையை உருவாக்கி அதன் ஊடாக புத்திஜீவிகளைக் கொணர்ந்து தமிழ் மக்களுக்கான தீர்வினை நோக்கிய பயணத்தில் செயற்படுவதே சிறந்ததொன்று. இதனைவிடுத்து தொடர்ந்தும் தமிழ்த் தரப்பு தமது கட்சிகளுக்கிடையில் முரண்பாடுகளை வளர்த்துக்கொண்டிருப்பது என்பது தமிழ் மக்களது தீர்வுத்திட்டத்திற்கு பாரிய பின்னடைவுகளைக் கொடுக்கும் செயலாகவே அமையும்.


சரியான தமிழ்த் தலைமை எது என்பது குறித்து மக்கள் தம்மைத் தயார்படுத்தவேண்டிய தேவை தற்போது உருவாகியுள்ளது. எதிர்வரும் சந்ததியினர் இப்போராட்டங்களை கையிலெடுத்து போராடவேண்டிய சூழலுக்குள் ஏன் தள்ளப்படவேண்டும் என்றால், தற்போது இருக்கக்கூடிய அரசியல் தலைமைகள் சரியாகச் செயற்படவில்லை என்பதேயாகும். வடக்கில் ஒரு அரசியலும், கிழக்கில் ஒன்றும், தெற்கில் பிறிதொரு அரசியலும் இடம்பெறுகிறது. இதில் மலையகத் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று மற்றொரு பக்க அரசியலும் சென்றுகொண்டிருக்க, முஸ்லீம் தலைமைகள் தமக்கான ஒரு தனி அலகு வேண்டுமென்று கேட்பது மட்டுமன்றி சிறுபான்மை சமுதாயம் ஒன்றுபட்டுச் செயற்பட இவர்கள் பாரிய இடையூறாக செயற்பட்டு வருகிறார்கள்.

ஆகவே இம் முரண்பாடுகளைக் களைவதன் ஊடாக, 35 ஆசனங்களை தமிழ் பேசும் மக்கள் கைப்பற்றுவதற்கான வாய்ப்புக்கள் ஒன்றிணைந்தால் மாத்திரமே சாத்தியமாகும். எதிர்க்கட்சிப் பதவியினை அன்று நல்லாட்சியில் தக்கவைத்துக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேசத்திற்கு காட்டுகின்ற கண்துடைப்பாகவே அமைந்தது. எதிர்க்கட்சியாக இருந்தோம் என்கிற பெயர் மாத்திரம் தான். 80 வயதினைக் கடந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்றச் செயற்பாடுகள் எதுவுமின்றி வீட்டிலிருந்து ஓரிரு அறிக்கைகளை வெளியிடுகின்றார். அவரது உடல்நலக் குறைவால் அவருக்கான ஓய்வும் வழங்கப்பட்டுள்ளது. ஒற்றுமை பற்றிப் பேசுகின்ற மூத்த அரசியல் தலைவர்கள், ஒற்றுமையை சீர்குலைக்கும் நோக்கில் மறுபக்கத்தில் செயற்படுவது வேடிக்கையானது. எனவே பிரிந்து சென்றிருக்கின்ற தமிழ்க் கட்சிகள் மீண்டும் கூட்டமைப்பாக இணைந்து செயற்படுவதற்கான முன்னெடுப்புக்களை செய்யத் தவறின், வட-கிழக்கில் தமிழர் தாயகம் என்ற ஒன்று இல்லாமல் போகின்ற சூழல் உருவாகும். அதன் பின்னர் மக்களால் இந்த அரசியல் தலைமைகள் ஓரங்கட்டப்பட்டு புதிய அத்தியாயத்துடன் தமிழ் மக்களுக்கானப் போராட்டம் உருவெடுக்கும் என்பதே இன்றைய நிலைப்பாடு.

**இரணியன்**







# தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்மை எங்கு அழைத்துச் செல்லும்?

ஈழத் தமிழரின் ஜனநாயக அரசியலுக்கு நீண்டதொரு வரலாற்றுத் தொடர்ச்சி உண்டு. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இந்த ஜனநாயக அரசியல் தமிழர்களின் கனதியான அவதானிப்பைப் பெற்றிருக்கின்றது. அன்றைய சேர். பொன்.இராமநாதன் தொடக்கம் ஜீ.ஜீ. பொன்னம்பலம். செல்வநாயகம். அமிர்தலிங்கம் ஊடாக இன்றைய இரா. சம்பந்தன் வரையில் மக்களின் மென் பங்குபற்றலுடன் கூடிய அவ்வகை அரசியலை முன்னெடுத்த தமிழ் தலைவர்கள் பலரை நினைவுகூர முடியும். அவ்வாறான மென்போக்கு கொண்ட தலைமைகளில் காணப்பட்ட குறை அல்லது பலவீனம் அல்லது சுயநலம் தமிழர்கள் மொத்த அரசியலையும் அங்கவீனப்படுத்தியிருக்கின்றது.

தமிழர் அரசியல் வரலாற்றில் குடிமூழ்கிப்போகும் சந்தர்ப்பங்களையும் உருவாக்கியிருக்கின்றது. ஆங்கிலேயரின் அவையில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்த சேர்.பொன்.இராமநாதன் தமிழர் அரசியல் விடயத்தில் ஆழமான கரிசனை கொண்டிருந்தவராகக் காணப்பட்டிருந்தால் இன்றைய இனப்பிரச்சினை அன்றே தவிர்க்கப்பட்டிருக்கும் என்று குறிப்பிடுவோரும் உண்டு. இராமநாதன் போன்று வாய்ப்புக்களைத் தவறவிட்ட தலைவர்களது அரசியல் கடந்து நீண்ட காலம் ஆகிவிட்டதனால், தற்போது தமிழர்களின் அரசியல் தலைவிதியை எழுதிக்கொண்டிருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பினரும், அதன் தலைவர் இரா. சம்பந்தனும் தமிழர்களை எங்கே கொண்டு செல்வார்கள் எனப் பார்ப்பதே காலப் பொருத்தமானதாகும்.

### கூட்டமைப்பின் உருவாக்கம்

தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஒக்ரோபர் மாதம், 20ஆம் திகதி, 2001ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டது. தமிழ் தேசிய அரசியலை 'சிக்கலில்லாமல்' தம்முடன் தொடர்ந்தும் கொண்டு செல்லக்கூடிய சில கட்சிகளை இணைத்து தேசியம், சுயநிர்ணயம், தன்னாட்சி ஆகிய அரசியல் கொள்கைகளைப் பிரதானப்படுத்தி, அவற்றை ஜனநாயக வழியில் முன்னெடுத்துச் செல்வதற்கான கூட்டமைப்பாகவே புலிகள் அதனை உருவாக்கினார்கள். அந்தக் கூட்டமைப்பின் மூலக் கொள்கை தமிழ் தேசியமாக இருந்தபடியால், பெயரின் முன்னொட்டில் தமிழ் தேசியம் இணைத்துக்கொள்ளப்பட்டு, தமிழ் தேசிய கூட்டமைப்பு என்கிற முழுப்பெயர் வடிவத்தைப் பெற்றது. தமிழ் தேசிய கூட்டமைப்புக்கான சின்னம் எது என்கிற குழப்பம் விடுதலைப்புலிகளுக்கு சில நாட்கள் இருந்தது. முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியன் பிரேரிக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்துக்குள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் அதிருப்தியால் உதயசூரியன் நிராகரிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் தமிழரசுக் கட்சியின் சின்னமான வீடு பரிந்துரைக்கப்பட்டு, தமிழ் தேசிய கூட்டமைப்பின் சின்னமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### புலிகள் கூட்டமைப்பை ஏன் உருவாக்கினர்?

தமிழரின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் 2002ஆம் ஆண்டு பொற்காலமாகும். புலிகள் நடத்திய 3 நாள் போரில் உலகமே அதிசயித்துப் பார்க்குமளவிலான வெற்றியை 2000ஆம் ஆண்டுகளில் பெற்றார்கள். இந்தப் போரியல் வெற்றியுடன் இலங்கை அரச படைகள் மற்றும் புலிகளுக்கிடையிலான படைவலு சமநிலைப்பட்டது என அப்போதைய இராணுவ ஆய்வாளர்கள் எழுதிவந்தார்கள். இதேகாலப்பகுதியில் ஓர் அரசின் படைகளுக்கு சமதையான கடல் இறைமையையும் புலிகள் பெற்றிருந்தனர். இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அவ்வாறான பலத்தைப் பெறுவதென்பது, அதுவும் புலிகள் போன்ற கொரில்லா போராட்ட அமைப்பு பெறுவதென்பது சர்வதேச படையியல் ஆய்வாளர்களை வியப்பில் ஆழ்த்திய விடயமாக இருந்தது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் படையியல் முன்னேற்றம் ஆச்சரியமானதாக இருப்பினும், சர்வதேச ரீதியில் புலிகளுக்கு உருவாக்கப்பட்டிருந்த இமேஜ் மிகமோசமானதாக இருந்தது. தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், வன்முறை யாளர்கள் என்கிற வகைக்குள் புலிகள் உள்ளடக்கப்பட்டு நோக்கப்பட்டார்கள். இந்த இமேஜை உருவாக்கிக்கொடுத்தவர்கள் யாரெனில், தமிழ் ஜனநாயக அரசியல் சக்திகள். அதாவது, தமிழ் மென் அரசியல் சக்திகள் என அறியப்பட்டவர்கள்தான். மேற்கு நாடுகள் பல புலிகளைத் தடைசெய்தமைக்குக் கூட இந்த மென் சக்திகள் செய்த பரப்புரைதான் காரணம்.



2000ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் பகுதிகள் (வடக்கு - கிழக்கு) இருவகை கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைக் கொண்டிருந்தன. ஒன்று இலங்கை இராணுவத்தின் கட்டுபாட்டுப் பகுதி, மற்றொன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இலங்கை அரசின் எவ்வித அரசியல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. கிட்டத்தட்ட வடக்கு - கிழக்கில் 30 வருட காலம் இதே நிலைமைதான். இலங்கை என்ற ஒரு நாட்டுக்குள் இரண்டு தேசங்கள் (தனித் தமிழீழ அரசாக, நாடாகப் பிரகடனப்படுத்தப்படவில்லை. நிதிசார் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசையே நம்பியிருக்க வேண்டியிருந்தமையால் தேசம் என்று குறிப்பிடுவதே பொருத்தம் எனக் கருதுகிறேன்) அரசியல், படையியல், குடியியல், பொருளாதாரமென வலுவான கட்டமைப்புக்களுடன் பிரிந்து நின்ற காலம் அதுவாகும். இதே காலப்பகுதியில் இலங்கை அரசு, அதன் நிர்வாகக் கட்டமைப்பு, இராணுவம் மற்றும் இலங்கையிலிருக்கும் ஏனைய கட்சிகளின் அரசியல் பற்றி அறிந்துகொள்ளாத, அதில் விருப்புக்கொள்ளாத தலைமுறையொன்றும் உருவாகியது.

இவ்வாறு இருவேறு கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் உருவாகியிருந்தமையால் இலங்கை என்ற நாட்டுக்குப் பொதுவாக நடக்கும் எந்தத் தேர்தல்களும் 2004ஆம் வரையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நெருங்கவில்லை. இலங்கை அரசினால் நடத்தப்படும் தேர்தல்களில் புலிகள் அக்கறை காட்டாமல் இருந்தமையும், அதனைப் புறக்கணித்து வந்தமையும் இதற்குப் பிரதான காரணம். பிரிந்து சென்று தனிநாடு அமைப்பதே புலிகளின் இறுதி இலட்சியமாக இருந்ததாலும், இலங்கையின் ஜனநாயக வழி மென் அரசியலில் தமிழர்கள் பல தடவைகள் ஏமாற்றப்பட்டு இருந்தமையாலும் புலிகள் இதனை விரும்பாதிருந்தனர். எனவே, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குரிய சில தேர்தல்கள் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே நடந்தன. ஜனநாயக முலாம் பூசிக்கொண்டு செயற்பட்ட தமிழ் தலைமைகள் இதனை சரியான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டன. உதாரணமாக, முல்லைத்தீவு, புதுக் குடியிருப்பு பிரதேச சபை 1980 ஆண்டுக்குப் பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால், இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருந்த வவுனியாவில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான தேர்தல் நடைபெற்றது. இதில் ஈ.பி.டி.பி அதிக செல்வாக்குப் பெற்றிருந்ததோடு, பிரதேச சபை தலைவராகவும் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஒருவரே தெரிவுசெய்யப்பட்டார். யாழ்.மாவட்டத்துக்கான பொதுத் தேர்தல் நெடுந்தீவில் நடந்தது. அங்கிருந்தே யாழ். மாவட்டத்தைப் பிரதிபலிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இந்தத் தேர்தல்களில் மிகக் குறைந்தளவிலான வாக்குகளுடன் முழு யாழ். மாவட்டத்தையும் பிரதி நிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வாய்ப்பு கிட்டியது. இப்படியே புலிகளின் கட்டுப்பாட்டுக்குரிய அரசியல், நிர்வாக நடைமுறைகளை இலங்கை அரசு மேற்கொண்டது.

வடக்கின் மிக முக்கிய அரச கட்டுப்பாட்டுப் பகுதியாக இருந்த வவுனியாவும், யாழ்ப்பாணமும் இராணுவத்தின் வசமிருந்தாலும், புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய ஆயுதக் குழுக்களைக் கொண்டே அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு செயற்பட்டு வந்த ஆயுதக் குழுக்களில் இருந்தும், தமிழரசுக் கட்சியிலிருந்தும் தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்கள் தமிழர்களுக்கு ஆதரவாக செயற்பட்டார்கள் என்பதை விட புலிகளுக்கு எதிரான சர்வதேச பரப்புரைக்கே அதிகம் பயன்படுத்தப்பட்டார்கள்.

இவ்வாறு இலங்கை அரசு மேற்கொண்ட தேர்தல்களுக்கும் ஆயுதப் போராட்ட காலத்துக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதான். எனவே, இந்தக் காலப்பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருந்த தமிழர் பகுதிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் தலைமைகளும் உருவாக்கப்பட்டார்கள். அவ்வாறு உருவான தமிழ் தலைமைகள் இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலில் இயங்கக்கூடியவர்களாக இருந்தனர். அதற்குப் பொருத்தமான தமிழ் ஜனநாயக அரசியல்வாதிகளையும், விடுதலைப் புலிகளால் தடைசெய்யப்பட்டிருந்த பிற இயக்கங்களின் தலைவர்களையும், செயலாளர்களையும் இலங்கை அரசு தெரிவுசெய்து இதற்குப் பயன்படுத்தியது. ஜனநாயக வழிமுறையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களாக இந்தத் தலைமைகள் இருந்தாலும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான சர்வதேச பரப்புரையை மேற்கொள்ளவே இவர்கள் இலங்கை அரசினால் பயன்படுத்தப்பட்டார்கள். இவர்கள் வெளிநாட்டுத் தூதுவராலயங்களும், வெளிநாடுகளுக்கும் சென்று, நாம்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள், ஜனநாயக வழிமுறையில் தெரிவுசெய்யப்பட்டவர்கள், புலிகள் பயங்கரவாதிகள், மிகமோசமான வன்முறையாளர்கள், வடக்கு - கிழக்கில் எவ்விதப் பிரச்சினைகளும் இல்லை எனப் புலிகளுக்கு எதிரான பெரும் பரப்புரையைச் செய்தனர். இதனால், புலிகளின் ஆயுதப் போராட்டம் சர்வதேச ரீதியில் மிலேச்சத்தனமானது என்ற முத்திரையிடலுக்குள்ளானது. எனவே, இந்த வகை ஜனநாயகத் தமிழ் தலைமைகள் புலிகளின் தீவிர கண்காணிப்புக்கு உட்பட்டவர்களாகவும், கொலைப் பட்டியலுக்கு உரியவர்களாகவும் இருந்தனர்.

இதனை இப்போதும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அடிக்கடி நினைவுகூர்வதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். "புலிகளின் கொலைப் பட்டியிலில் எனது பெயரும், எனது சகாக்களின் பெயர்களும் இருந்தன" என அவர் குறிப்பிடுவார். எனவேதான் சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இரா.சம்பந்தன் அரசுக்கு மிகவும் வேண்டப்பட்டவராகவும், விசுவாசமுள்ளவராகவும் செயற்பட்டார். இதனால், அமைச்சரவை அந்தஸ்துக்குரிய வசதி வாய்ப்புக்களைக் கூட இலங்கை அரசிடமிருந்து அவர் பெற்றுக்கொண்டார். உதாரணமாக, இலங்கை அரசியலில் மிகக் கனிசமான முக்கியஸ்தர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் குண்டுதுளைக்காத வாகனத்தை இரா.சம்பந்தன் அப்போது பெற்றிருந்தார் என்ற கதை கூட உண்டு.

இவ்வாறு புலிகளுக்கு எதிராக தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொண்ட தீவிரமான பரப்புரையால் சர்வதேச ரீதியில் புலிகள் தலைகுனிவிற்குள்ளானார்கள். போர்முனையில் புலிகள், உலகமே வியக்கும் சாதனைகளை நிலைநாட்டினாலும், தமது கொள்கை நிலைப்பாட்டையும், ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தையும் சர்வதேசத்திடம் முன்வைத்து, அதனை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு இந்தப் பரப்புரைகள் பெரும் தடையாயிருந்தன. அப்போதுதான் ஜனநாயக அரசியல்வாதிகளின் பலத்தைப் புலிகள் உணர்ந்துகொண்டார்கள். எனவேதான் தமிழ் ஜனநாயகத் தலைமைகள் அனைவரையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து தமது குரலாக அவர்களை மாற்றவேண்டிய தேவை புலிகளுக்கு எழுந்தது. இதற்காக உருவாக்கப்பட்டதே தமிழ் தேசிய கூட்டமைப்பு.

இதற்கு மேலதிக வலுவாக இன்னொரு காரணத்தையும் இணைத்துக் கொள்ளலாம். 2000ஆம் ஆண்டுகளில் புலிகள் கண்ட போரியல் வெற்றியோடு, அவர்கள் ஆயுதப் போரில் மட்டுமே அதிக விருப்பு கொண்டிருக்கிறார்கள் எனவும், இனப்பிரச்சினையை வன்முறை வழியில் நின்றே தீர்க்க முயற்சிக்கிறார்கள் என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

**ஜெரா**

தொடரும்...

# மீண்டும் நிறைவேற்று அதிகாரத்தை மக்கள் ரணிலிடம் ஒப்படைப்பார்களா?



வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பின் பின்னர் பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைப்பதற்கும், அதை தொடர்ந்து பாராளுமன்றத்தை கலைப்பதற்கும் திட்டமிட்டு வருவதாக எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி மீது குற்றம் சாட்டிக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாகவும், இதனால் இலங்கை அரசியலில் புதியதொரு மாற்றம் உருவாக்கப்படும் என்றும் எதிர்க்கட்சிகள் கனவு கண்டுகொண்டிருப்பதையும் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல் ஆகியவற்றினூடாக அரசியலில்பாரிய மறுமலர்ச்சி ஏற்படப்போகிறதென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரா திஸநாயக்கா ஆருடம் கூறிக் கொண்டிருக்கிறார். இதன் அர்த்தம் என்னவென்றால் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இரு தேர்தல்கள் மூலம் ஆட்சி மாற்றம் எற்படப்போகிறது. அப்போது இலங்கையின் அரசியலில் ஒரு புதிய புரட்சி ஏற்படவிருக்கிறது என்பதுதான் அதன் அர்த்தமாக கொள்ளப்படலாம்.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல் ஆகியவற்றை நடத்துவதுடன் அதனை அடுத்து மாகாண சபைகளுக்கான தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஆகியவற்றை நடத்துவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் வரவு செலவு திட்டம் சார்பாக நடந்த குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதும், ஐ.தே.கட்சி சம்மேளனத்தில் உரையாற்றும்போதும் தெரிவித் திருக்கிறார்.

அடுத்தவருடம் முழுவதும் தேர்தலுக்கான ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவே மேற்படி செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் ஜனாதிபதி தேர்தல் முதலில் இடம்பெறுமா?, அன்றி பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படுமா? என்ற உறுதியான முடிவுக்கு இன்னும் ஜனாதிபதியோ தேர்தல் திணைக்களமோ வரவில்லை என்பதுவேயுண்மை. எப்பொழுதும் இல்லாத இழுபறி இடம்பெற்றுக் கொண்டேயிருக்கிறது.

சில எதிர்த் தரப்பினர் பாராளுமன்றத்தை உடனடியாக கலைத்து பொதுத் தேர்தலை நடத்துங்கள் என்று கோரி வருகிறார்கள். இன்னும் சிலரோ "ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்தி மக்கள் ஆணையுடன் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யுங்கள்" என ஆலோசனை கூறிக்கொண்டிருக்கிறார்கள். பொதுத் தேர்தலையோ ஜனாதிபதி தேர்தலையோ நடத்தவேண்டாம் மாகாணசபைத் தேர்தலையும், உள்ளூராட்சி சபை தேர்தலையும் நடத்தும் படி இன்னொரு தரப்பினர் ஜனாதிபதிக்கு அழுத்தங்களை பிரயோகிக்கப் பார்க்கிறார்கள்.

ஆனால் எந்த தேர்தலை முதலில் நடத்துவது தொடர்பாக ஜனாதிபதியோ, தேர்தல்கள் ஆணைக்குழுவோ முடிவு காணத் தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகவே தெரிகிறது. எது எப்படி இருப்பினும் தேர்தல் நடத்துவது தொடர்பாக ஒரு தளம்பல் நிலை காணப்படுகிறது என்பது செய்திகளால் அறியக்கூடியதாக இருக்கிறது.

நடத்தப்படவுள்ள தேர்தல் ஒவ்வொன்றும் ஒவ்வொருவகை அதிகாரத்தை கொண்டவை என்பதனால் எந்த தேர்தலை முதலில் நடத்துவது என்பது ஒரு தர்ம சங்கடமான நிலையை ஜனாதிபதியும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் போராடிக்கொண்டிருக்கிறது என்பது தெளிவாகவே தெரிய வருகிறது. ஜனாதிபதி தேர்தல் என்பது நிறைவேற்று அதிகாரம் கொண்ட நாட்டின் தலைவர் ஒருவரை தெரிவு செய்யும் தேர்தலாகும். பொதுத்தேர்தல் என்பது மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்து பாராளுமன்றத்துக்கு மக்கள் ஆணையை வழங்கும் தேர்தல் என வரையறுத்துக் கொள்ள முடியும். இதற்கு புறம்பானதாக மத்திய அதிகாரத்தை பகிர்ந்தளித்த மாகாண சபைகளுக்கான தேர்தல் என்பது இன்னொருவகை அதிகார பகிர்வை சுட்டிக்காட்டுவதாகவும் அமையும். முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்தியாகவேண்டுமென தீர்மானத்தை மேற்கொள்ள முனைந்தாலும் இந்த தேர்தல் நடத்தப்படுவதற்குரிய பல்வேறு சவால்களை எதிர் கொள்ளவேண்டிவரும் என்பதை ஜனாதிபதி அனுபவபூர்வமாக உணர்ந்து கொண்டிருப்பதனாலேயே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு தயக்கம் காட்டுகிறார் என்பது தெளிவாகவே தெரியவருகிறது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கையின் ஜனாதிபதியாக வரவேண்டுமென்று கனவுகண்டு கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க அந்த வாய்ப்புக்களை பல தடவைகள் இழந்துபோன நிலையில் தான் நினையாப்பிரகாரமாக எதிர்பாராமல் அடித்த குருந்சந்திர யோகத்தினால் 2022 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆக்கப்பட்டார்.

முதலில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டு ஜனாதிபதி ஆகும் வாய்ப்பு ரணில் விக்கிரம சிங்கவுக்கு கிடைக்குமானால் அடுத்து நடத்தப்படும் பொதுத் தேர்தலில் அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியோ அன்றி அவருக்கு துணை நிற்கும் பாராளுமன்ற பலமோ ஏற்பட சாத்தியமான வாய்ப்பு ஏற்படலாம். ஏனெனில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் ஒருவரின் செல்வாக்குக்கு உட்பட்டதாகவே பாராளுமன்ற தேர்தல் அமைய முடியும். உதாரணமாக 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் முடிந்ததன்பின்பே பொதுத் தேர்தல் நடத்தப்பட்டதன் காரணமாக பாராளுமன்றம் பொதுஜன பெரமுனவின் ஆட்சிக்கு உட்பட்டதாக வரமுடிந்தது.

ஜனாதிபதியை பொறுத்தவரை அவரின் அடுத்தகனவு ஜனாதிபதி தேர்தலில்தான் வெற்றிபெறவேண்டும் என்ற கனவில் அவர் மிதந்து கொண்டிருப்பது தெளிவாகவே தெரிகிற விடயம். ஆனால் தனது கனவுக்கு பல சவால்கள் உள்ளது என்பதும் அவருக்கு தெரிந்த விடயம். நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பலமான தரப்பினர் போட்டியிட வரிந்து கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஊடக செய்திகள் தெரிவிக்கிற தகவல். இவ்வாறானதொரு கொதி நிலையில் ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்படுவதற்குரிய வாய்ப்புக்கள் எந்தளவானது என்பது அளவிட்டுக் கூற முடியாது.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி படு தோல்வி கண்டது. அதன் வாக்கு வங்கி பூஜ்ஜியத்துக்கு கீழ் விழுக்காடு அடைந்துள்ளது. தமிழ் - முஸ்லிம் மக்கள் இவர் மீது நம்பிக்கை இழந்தவர்களாகவே தற்போது காணப்படுகிறார்கள். அதுவுமின்றி தமிழ்த்தரப்பினர் ஒரு பொது வேட்பாளரை களம் இறக்க காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ரணிலுக்கு சாதகமாக அமையப்போவதில்லை.

இருந்த போதும் கோத்தபாயவின் ஆட்சி வீழ்ச்சிக்குப்பின் அதளபாதாளத்துக்கு போய்விட்ட நாட்டின் பொருளாதாரத்தையும், கியூவரிசை சகாப்தத்தை மீட்டெடுத்த ஒரு சுப்பர்மேன் என்ற ஒரு மாற்றம் மக்கள் மனதில் நல்ல மனப்பதிவுகளை உண்டாக்கிவருகிறது, என்பதை தட்டிக்கழிக்கவும் முடியாது.

ஜனாதிபதி தேர்தலில் ரணில் வெற்றிபெறவேண்டுமாக இருந்தால் 25 மாவட்டங்களிலும் ரணிலின் வாக்குவங்கி உயர்ந்த பெறுமானம் கொண்டதாக இருக்கவேண்டும். அதற்கு கட்சி சிறந்த கட்டமைப்பைக் கொண்டதாக காணப்படவேண்டும். அப்போதுதான் 51 வீதமான வாக்குகளை பதிவு செய்யும் வாய்ப்பிருக்கிறது. துரதிஸ்டவசமாக அந்த நிலை ரணிலுக்கோ ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சிக்கோ இல்லை என்ற கருத்தே அதிகமாகவுள்ளது. பாராளுமன்ற தேர்தலை முதலில் நடத்தி தனது ஜனாதிபதி கனவை நிறைவேற்ற வேண்டுமென்று அவர் விரும்பினாலும் சூழ்நிலை அவ்வாறில்லை.

எதிர்த்தரப்பில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, பொதுஜன பெரமுன என்ற ஒரு பட்டாளமே எதிரணியாக நிற்கும் நிலையே காணப்படுகிறது.



**திருமலை நவம்**

# இமயமலைப் பிரகடனமும் தோற்றுப் போகுமா?



ஒவ்வொரு தனி மனிதனும் சமாதானத்துடனும் கௌரவத்துடனும் நம்பிக்கையுடனும் எவ்வித பயமும் சந்தேகப்படுத்தலுமின்றி சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய ஓர் இலங்கை உருவாக்கப்படவேண்டும் என்ற இலக்கை மையப்படுத்திய இமய மலைப்பிரகடனம் உலகத்தமிழர் பேரவையால் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் கடந்த 7 ஆம் திகதி (7.12.2023) கையளிக்கப்பட்டிருந்தது. மேற்படி பிரகடனத்தை கண்டித்தும் நிராகரித்தும் உலகத்தமிழர் பேரவையின் தன்னிச்சையான இச் செயற்பாட்டை கண்டித்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட பலர் தமது கண்டனங்களை முன்வைத்து வருகிறார்கள்.

அடுத்த ஆண்டு பாராளுமன்ற தேர்தலும் ஜனாதிபதி தேர்தலும் நடைபெறவுள்ள நிலையில் தமது வீழ்ச்சியை தடுத்துக்கொள்ளவும் பேரவையின் ஊடாக ஜனாதிபதி ரணிலுக்கு அங்கீகாரத்தை வழங்கும் மறைமுக நடவடிக்கையில் கூட்டமைப்பு என்று கூட்டமைப்பின்மீது சாட்டிய குற்றச்சாட்டுக்கு பதில் அளித்த பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இந்த பிரகடனத்துக்கும் கூட்டமைப்பும் எந்தவித தொடர்புமில்லை என மறுத்துரைத்துள்ளார். உலகத்தமிழர் பேரவையின் பிரகடனமானது தமிழ் மக்கள் மத்தியில் பல சந்தேகங்களையும் தலைவர்கள் தமிழ் தலைவர்கள் மத்தியில் குழப்பத்தையும் ஏற்படுத்தி விட்டிருக்கிறது என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இலங்கையின் ஆட்சிமுறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதோடு புதிய அரசியல் அமைப்பின் ஊடாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற விடயத்தில் நான் உறுதியாக இருக்கிறேன். அத்துடன் 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் காணி அதிகாரங்கள் உட்பட்ட தமிழர் கோரிக்கை அனைத்துக்கும், தீர்வுகான ஆர்வமாகவுள்ளேன்" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலக தமிழ் பேரவையினர் பௌத்த தேரர்கள் ஒருங்கிணைந்து சிறந்த இலங்கைக்கான சங்கமன்றம் மற்றும் உலக தமிழர்பேரவை ஆகியதரப்பினர் கடந்த 7 ஆம் திகதி (7.12.2023) ஜனாதிபதியை சந்தித்து இமயமலைப் பிரகடனத்தை அவரிடம் கையளித்து, கலந்துரையாடியபோதே ஜனாதிபதி மேற்கண்ட தனது நோக்கை எடுத்துரைத்துள்ளார்.

தமிழர் பேரவை சார்பில் அதன் பிரதிநிதியான சுரேன் சுரேந்திரன், (பிரித்தானியா), கலாநிதி கண்ணப்பன் முகுந்தன் (அவுஸ்திரேலியா), பவன் பவகுகன் (பிரித்தானியா), பிரகாஸ் இராஜசுந்தரம் (அவஸ்திரேலியா), வேலுப்பிள்ளை குலேந்திரன் (பிரித்தானியா), ராஜதவரட்ண சிங்கம் (கனடா), கலாநிதி எலியாஸ் ஜோசப் ஜெயராஜா (அமெரிக்கா) ஆகியோரும் இலங்கைக்கான சங்க மன்றத்தின் சார்பில் அமரபுர நிக்காயவின் அம்பக ஹபிட்டிய பிரிவின் அனுநாயக்க, கலாநிதி மாதம்பகம, அஸ்ஸாஜி தஸ்ச தேரர்களின் பிரதம சங்க நாயக்கர், சியம்பல கஸ்வெவ விமல சார தேரர், ஸ்ரீ தர்மரக்ஷித பிரிவின் பொது செயலாளரும் மேல் மாகாண பிரதம சங்க நாயக்கருமான கித்தலாகம, ஹேமசார நாயக்கதேரர் உட்பட்ட இன்னும் பலர் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த 75 வருடங்களுக்கு மேலாக தந்தை செல்வநாயகம் தொடக்கம் தற்போதைய தலைவர் இரா.சம்பந்தன் வரை தீர்க்கப்படாமலுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் இந்த இமய மலைப்பிரகடனம் தயாரிக்கப்பட்டுள்ளதாக உலக பேரவையினர் வெளிப்படுத்தி வருகிறார்கள். புலம்பெயர் அமைப்புக்கள், பௌத்த தேரர்கள் இணைந்து பலமுறை நேபாளத்தில் சந்தித்து கலந்துரையாடியதன் பிரகாரம் இந்த இமைய மலைப்பிரகடனம் தயாரிக்கப்பட்டது. பிரகடனத்தை இலங்கை ஜனாதிபதியிடம் கடந்த 7 ஆம் திகதி கையளித்தபோதும், உத்தியோகபூர்வமாக கடந்த 8 ஆம் திகதி (8.12.2023) கண்டியில் இது வெளியிடப்பட்டுள்ளது.

6 முக்கிய அம்சங்கள் உள்ளடங்கியுள்ள இப்பிரகடனத்தில்,

1.இலங்கையின் பல்லினத் தன்மையை பேணுதல்.

2.இன்றைய பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க போராடுவது.

3.அதிகார பரவலாக்கத்தை மாகாண மட்டத்தில் செயற்படுத்துவது.

4.அதிகாரப்பகிர்வு கொண்ட நாடாக இலங்கையை ஆக்குவது.

5.கசப்பான கடந்த கால அனுபவங்களை மனதில் கொள்ளாது அவை மீண்டும் ஏற்படாமல் தடுத்துக் கொள்வது.

6.மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், மற்றும் சர்வதேச ஒப்பந்தங்கள் ஆகியவற்றை நடை முறைப்படுத்துவது.

சிங்கள தலைமைகள் மற்றும் பௌத்த மத பீடங்கள், தேரர்கள் அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள் என்ற வகையில் பல தரப்பினருக்கும் இப்பிரகடனம் கையளிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இக்குழுவினர் சந்தித்து கலந்துரையாடிய தருணத்தில் அவர் ஏலவே பலமுறை வாசித்த பாடக்குறிப்புப்போல் பின்வரும் விடயங்களை நடை முறைப்படுத்தப்போவதாக தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு புதிய அரசியல் அமைப்பினூடாக நிரந்தர தீர்வு காணப்படும். 13 ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், மாகாணம் மற்றும் மாவட்ட சபைகள் ஊடாக அதிகாரங்களை பகிரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி வழமையைப்போல் புழுகு மூட்டையை அவிட்டு விட்டிருப்பதோடு, மாகாண சபைகளுக்கு காணி அதிகாரங்களை வழங்கும் வகையில் தேசிய காணி ஆணைக்குழுவின் மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படுவதாகவும், 1985 ஆண்டுக்கு முன் அமைந்திருந்த வகையில் வனப்பகுதிகளின் எல்லைகள் மீளவும் பின் பற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போர் காலத்தில் படைகள் கையகப்படுத்திய காணிகள் மீண்டும் உரித்துடையவர்களுக்கு கையளிக்கப்படுமென்றும் பல வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறார்.

இந்த வாக்குறுதிகள் அனைத்துமே அடுத்தவருடம் நடைபெறவுள்ள தேர்தலுக்கான வாண வேடிக்கைகள் என்றும் இன்றைய ஜனாதிபதி திரு. ரணில் விக்கிரமசிங்க எத்தனை தடவைகள் தமிழர்களுக்கான தீர்வை கொண்டு வருவேன், கொண்டுவருவேன் என சத்தியம் அளித்துள்ளார் அத்தனையும் புஸ்வாணமாகியதே மிச்சம். எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

ஜனாதிபதி விக்கிரமசிங்க இதுவரை எத்தனை முறை பிரதமராக இருந்துஅசத்தியிருக்கிறார். சந்திரிக்கா அம்மையார் கொண்டுவந்த தீர்வுப் பொதியை பாராளுமன்றத்தில் தீயிட்டு, எரித்த பெருமை இவரையே சாரும். கயிற்றில் ஆடும் பம்பரம்போல் உலகத் தமிழர் பேரவையினரும் சில தேரர்களும் இவரின் கயிற்றில் ஆடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

உலக தமிழர் பேரவையின் பொய்த்தனம் பற்றி விசனம் தெரிவித்திருக்கும் ஆறு புலம் பெயர் அமைப்புக்கள் இந்த அமைப்பின் திருகுதாளம் பற்றி குறிப்பிடுகையில், "இலங்கை விஜயமொன்றை மேற்கொண்டு பல்வேறு சந்திப்புக்களை நடத்திவரும் உலகப்பேரவையை சேர்ந்த பிரதி நிதிகள் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களில் பெரும்பான்மையினரை பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்றும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையான விடயங்களை முன்னெடுத்தால் மட்டுமே நிரந்தரமான தீர்வு தமிழ் மக்களுக்கு கிடைக்குமென்று சுட்டிக்காட்டியள்ளனர். உலக தமிழர் பேரவைக்கு எதிராக விசனத்தை கொட்டியிருக்கிறார்கள்.

2009 செப்டெம்பரில் பாரீசில் உருவாக்கப்பட்ட இந்த உலகத் தமிழர் பேரவை பத்து ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட 14 நாடுகளைச் சேர்ந்த அமைப்புக்களின் பிரதி நிதித்துவத்துடன் உருவாக்கப்பட்டது என்றும் இவற்றில் பெரும்பாலானவை உலகத் தமிழர் பேரவையிலிருந்து பிரிந்துவிட்டன. குறிப்பாக பிரித்தானிய தமிழ் மன்றம், அவுஸ்திரேலியா தமிழ் காங்கிரஸ், அமெரிக்க ரி.பி.ஏ.சி போன்ற அமைப்புக்கள் உலகத்தமிழர் பேரவையிலிருந்து விலத்திவிட்டன. இதனால் புலம்பெயர் தமிழ் மக்களில் பெரும்பான்மையினரின் ஆதரவை உலகத்தமிழர் பேரவை கொண்டிருக்கவில்லை என சுட்டிக்காட்டியிருந்தனர். அது மட்டுமன்றி 2014ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டு மீண்டும் கடந்த 2022 ஆம் ஆண்டு தடை நீக்கப்பட்ட புலம் பெயர் அமைப்புக்களில் உலக தமிழர் பேரவையும் ஒன்று என சுட்டிக்காட்டியுள்ளனர்.

இரா.சம்பந்தன் அவர்களை இந்த குழுவினர் சந்தித்து உரையாடியபோது அவர் கூறியதாவது, ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுத்து இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக்காண பௌத்த தேரர்கள், பொது மக்களை மையப்படுத்திய உலகத் தமிழர் பேரவையினரின் முயற்சியானது தாமதமாக முன்னெடுக்கப்படுவதாக இருந்தாலும் அது வெற்றி பெறுவதிலேயே தமிழர்களினதும் ஒட்டுமொத்த நாட்டினதும் எதிர்காலம் தங்கியுள்ளது என சம்பந்தன் அக்குழுவினரிடம் தெரிவித்துள்ளார். இச்சந்திப்பின்போது நல்ல சில விடயங்களும் நடந்திருக்கிறது. சில முரண்பாடுகளும் வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது.

முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய ரவூப் ஹக்கீம், அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டு தமது பூரணமான ஆதரவை தருவதாக வெளிப்படுத்தியிருப்பது நல்ல சகுனமாக இருந்தாலும், அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பிரதிநிதிகள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பிரதிநிதிகள், பங்குகொள்ளாததும், இலங்கை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய சிவஞானம் ஸ்ரீதரன், கலையரசன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கலந்துகொள்ளாமை உட்குத்தல் ஒன்றை வெளிப்படுத்துவதாகவே தெரிகிறது.

சம்பந்தன் இம் முயற்சி தொடர்பில் மேலும் கருத்து ரிவிக்கையில், இது ஒரு புதிய அணுகுமுறை. துரதிஷ்டவசமாக எந்தவொரு தரப்பினராலும் இதற்கான முயற்சிகள் ஏலவே முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பாக தமிழ் அரசியல் வாதிகளாகிய தம்மால்கூட இம்முயற்சி முன்னெடுக்கப்படவில்லை. பௌத்த தேரர்கள் அனைத்து கட்சி உறுப்பினர்கள் ஆகியோருக்கு இடையிலான முரண்பாட்டை தீர்க்கும் இவ்வணுகு முறையை பல ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்திருக்கவேண்டும் என்ற தாம் தவறவிட்ட பிழைகளை சம்பந்தர் நாசூக்காக ஏற்றுக்கொண்டிருக்கிறார். அனைத்தையும் கைநழுவ விட்டுவிட்டு ஏமற்றிவிட்டார்கள் நாம் எமாற்றப்பட்டுவிட்டொம் என்று கூறுவதும் வெறும் ஒப்பாரி வைத்து புலம்புவதால் ஒன்றுமே ஆகப்போவதில்லை.

நல்லிணக்கத்தை இனங்களுக் கிடையில் ஏற்படுத்துவதற்கான புனிதமான பயணத்துக்கு பொருத்தமான தருணம் ஏற்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்த்தனா தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் உலகத்தமிழர் பேரவை மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் சபாநாயகர் தலைமையில் அனைத்து கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடந்த சந்திப்பின்போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

14ஆம் பக்கம் பார்க்க...

திருமலை நவம்

# ஊடகவியலாளர்கள் 44 பேர் அரச பயங்கரவாதத்தால் படுகொலை

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

17. பெயர் : சதாசிவம் பாஸ்கரன்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 15 ஆகஸ்ட். 2006. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். செய்தித்தாள் முகவராகவும். உதயன் நாளிதழ் விநியோக ஓட்டுநராகவும் பணிபுரிந்தவர். யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் புதூர் சந்தி அருகே இலங்கை ராணுவத்தினர் வேன் மீது சுட்டதில் இவர் பலியானார்.

18. பெயர் : சின்னத்தம்பி சிவமகராஜா
தொழில் : நாளிதழ் உரிமையாளர்
கொலை செய்யப்பட்டது : 20 ஆகஸ்ட். 2006. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். யாழ்ப்பாண தமிழ் நாளிதழான நமது ஈழநாடு செய்தி ஏட்டின் நிர்வாக மேலாளர் ஆவார். யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பகுதியில் ராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயம் எனக் கருதப்படும் பகுதியில் அமைந்த இவரது இருப்பிடத்தின் உள்ளே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

19. பெயர் : எஸ்.ரவீந்திரன்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 12 பெப்ரவரி. 2007. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். யாழ்ப்பாண தமிழ் நாளிதழான நமது ஈழநாடு செய்தி ஏட்டின் அச்சு இயந்திர ஊழியராக வேலை பார்த்தவர். யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் அமைந்த இவரது வீட்டினுள்ளே அடையாளம் தெரியாதவர்கள் புகுந்து இவரைச் சுட்டுக் கொன்றார்கள்.

20. பெயர் : சுப்பிரமணியம் ராமச்சந்திரன்
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 15 பெப்ரவரி. 2007. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். யாழ். வடமராட்சிப் பகுதியில் யாழ் தினக்குரல். வலம்புரி ஆகிய இருவேறு நாளிதழ்களுக்குச் சிறப்புச் செய்தியாளராக பணிபுரிந்தவர். ராணுவத்தினர் அதிகம் செறிந்த. வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் ஆயுதம் தாங்கிய சிலரால் கடத்தப்பட்டு இவர் கொல்லப்பட்டார்.

21. பெயர் : சந்திரபோஸ் சுதாகர்
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 16 ஏப்ரல். 2007. வவுனியா
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். ஈழநாதம். வெளிச்சம். ஈழநாடு. நிலம். காலச்சுவடு. வீரகேசரி போன்ற பல்வேறு இதழ்களுக்கு தொடர்ந்து செய்திகள். கட்டுரைகள் வழங்குபவராக இருந்தார். நிலம் என்ற பெயரில் இவர் கையெழுத்துப் பிரதி ஒன்றையும் நடத்தி வந்தார். வவுனியா திருநாவற்குளம் பகுதியில் இவரது வீட்டுக்குள் புகுந்த அடையாளம் தெரியாத நால்வரால் இவர் கொல்லப்பட்டார்.

22. பெயர் : செல்வராசா ராஜிவர்மன்
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 29 ஏப்ரல். 2007. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : யாழ்ப்பாணம் உதயன் தமிழ் நாளிதழில் பயிற்சி ஊழியராக இவர் பணிபுரிந்தவர். அதற்கு முன்னதாக தினக்குரல். நமது ஈழநாடு இதழ்களுடன் இணைந்து வேலை பார்த்தவர். யாழ்ப்பாணம். நாவலர் சாலையில். இருசக்கர வாகனத்தில் வந்த கொலையாளிகளால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

23. பெயர் : சகாதேவன் நிலக்சன்
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 01 ஆகஸ்ட். 2007. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடக ஆய்வு மற்றும் பயிற்சி மையத்தில் பயின்ற ஊடக மாணவர் ஆவார். கூடவே இவர் பகுதிநேர பத்திரிகையாளராகவும் பணிசெய்து வந்தார். யாழ்ப்பாண மாவட்ட மாணவர் கூட்டமைப்பின் வெளியீடு ஒன்றின் ஆசிரியர்களில் ஒருவராகவும் இவர் இருந்தார். இருசக்கர வாகனத்தில் வந்தவர்களால் வீட்டின் முன் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

24. பெயர் : அந்தோணிப்பிள்ளை ஷெரின் சித்திரஞ்சன்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 05 நவம்பர். 2007. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர் யாழ்ப்பாண தமிழ் நாளிதழான யாழ் தினக்குரலின் விநியோக முகவராக இருந்தவர். நாளிதழ்களை விநியோகிக்கச் சென்ற வழியில் இவர் காணாமல் போனார்.

25. பெயர் : வடிவேலு நிர்மலராஜன்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 17 நவம்பர். 2007. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : யாழ்ப்பாண தமிழ் நாளிதழான உதயனில் பிழை திருத்துநராக இவர் பணியாற்றியவர். நாளிதழ் அலுவலகத்தில் இரவுப்பணி முடித்து வீடு திரும்பும் போது இவர் காணாமல் போனார்.

26. பெயர் : இசைவிழி செம்பியன் (சுபாஜினி)
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 27 நவம்பர். 2007. கிளிநொச்சி
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர் தமிழ்ப்போராளிகளின் வானொலி நிலையமான 'புலிகளின் குரல்' வானொலியில் நிகழ்ச்சி வழங்குபவராக பணிசெய்தவர். இந்த வானொலி நிலையத்தின் மீது நடந்த கொடூரமான விமானத் தாக்குதலில் இவர் பலியானார். இந்த தாக்குதலுக்கு யுனெஸ்கோ. எல்லைகளைக் கடந்த செய்தியாளர் அமைப்பு போன்றவை கண்டனம் தெரிவித்திருந்தன.

27. பெயர் : சுரேஷ் லிம்பியோ
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 27 நவம்பர். 2007. கிளிநொச்சி
கூடுதல் கருத்துக்குறிப்பு : புலிகள் குரல் வானொலியில் தொழில்நுட்ப அலுவலராக இவர் வேலை பார்த்தவர். இலங்கை விமானப்படையின் தாக்குதலில் இவர் உயிரிழந்தார். இந்த தாக்குதலை யுனெஸ்கோ. எல்லைகளைக் கடந்த செய்தியாளர் அமைப்பு போன்றவை கண்டித்தன.

28. பெயர் : டி.தர்மலிங்கம்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 27 நவம்பர். 2007. கிளிநொச்சி
கூடுதல் கருத்துக்குறிப்பு : புலிகளின் குரல் வானொலியில் பணிபுரிந்தவர். இலங்கை விமானப்படை நடத்திய தாக்குதலில் இவர் உயிர்துறந்தார். இந்த கொடூரத் தாக்குதலுக்கு யுனெஸ்கோ. எல்லைகளைக் கடந்த செய்தியாளர் அமைப்பு போன்றவை கண்டனம் தெரிவித்தன.

29. பெயர் : டபிள்யூ.குணசிங்கே
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 05 டிசம்பர். 2007.




கெப்பிட்டிகொலாவ.
கூடுதல் கருத்துக்குறிப்பு : சிங்கள நாளிதழான திவையின ஏட்டின் பிராந்திய சிறப்புச் செய்தியாளராக இவர் பணியாற்றி வந்தார். வடமத்திய மாகாணம். கெப்பிட்டிகொலாவ பகுதியில் பயணிகள் பேருந்து மீது நடந்த சாலையோர குண்டுத் தாக்குதல் ஒன்றில் இவர் கொல்லப்பட்டார்.

30. பெயர் : பரணிரூபசிங்கம் தேவகுமார்
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 28 மே. 2007. யாழ்ப்பாணம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : சக்தி தொலைக்காட்சியின் யாழ்.சிறப்புச் செய்தியாளர் இவர். அந்த தொலைக்காட்சி நிறுவனத்தின் பிராந்திய அலுவலகத்தின் தலைவராகவும் இவர் செயல்பட்டு வந்தார். பணி முடிந்து வீடு திரும்பியபோது ஆயுதம் தரித்த கும்பலால் கடத்தப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்டார்.

31. பெயர் : முகமத் ரஸ்மி மகரூப்
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 06 அக்டோபர். 2008. அநுராதபுரம்
கூடுதல் கருத்துக்குறிப்பு : சிரச தொலைக்காட்சியின் பிராந்திய சிறப்புச் செய்தியாளராக இவர் பணி புரிந்தவர்.

32. பெயர் : ரசியா ஜெய்ந்திரன்
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : அக்டோபர். 2008. (திகதி கிடைக்கவில்லை)
கூடுதல் கருத்துக்குறிப்பு : ஈழநாதம் தமிழ் நாளிதழின் உதவி ஆசிரியராக முன்பு இவர் பணியாற்றியவர். மன்னார் பகுதியில் இலங்கை ராணுவத்தால் திட்டமிட்டு வழியமைக்கப்பட்டு இவர் படுகொலை செய்யப்பட்டார்.

33. பெயர் : லசந்த விக்கிரமதுங்க
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 09 ஜனவரி. 2009. கொழும்பு
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர் ஆங்கில வார ஏடான தி சண்டே லீடரின் நிறுவன முதன்மை ஆசிரியர் ஆவார். இவர் கொழும்பு நகரின் சுறுசுறுப்பான ஒரு வீதியில். பட்டப்பகலில். நான்கு இருசக்கர வாகனங்களில் வந்த எட்டு கொலையாளிகளால் வழிமறித்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தப் படுகொலை. தலைநகரத்தின் உயர் பாதுகாப்புப் பகுதியில் நடந்தது. ராணுவ விமான நிலையம். விமானப் படைத்தளம் போன்றவை அமைந்திருந்த இடத்துக்கு மிக அருகில் இந்தப் படுகொலை நடந்தது.

34. பெயர் : புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி
தொழில் : பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 12 பெப்ரவரி. 2009. தேவிபுரம். முல்லைத்தீவு
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர். ஈழநாதம். வெளிநாதம். ஈழமுரசு. வெளிச்சம் போன்ற பல்வேறு தமிழ் ஏடுகளுக்கு எழுத்துக்கள் மூலம் பங்களிப்பு செய்து வந்தவர். சில பல வானொலி நிலையங்களுக்கும் இவர் பங்களிப்பு செய்திருக்கிறார். அரசால் பாதுகாப்பு பகுதி என அறிவிக்கப்பட்ட இடத்தில் வாழ்ந்தபோது ராணுவ குண்டுவீச்சில் இவர் படுகாயமடைந்தார். பின்னர் காயங்கள் காரணமாக உயிரிழந்தார்.


35. பெயர் : சசி மதன்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : 05 மார்ச். 2009. முல்லைத்தீவு
கூடுதல் கருத்துக்குறிப்பு : முல்லைத்தீவு பகுதியில் இவர் ஈழநாதம் தமிழ் நாளிதழை விநியோகித்து வந்தவர். இரணைப்பாலை பகுதியில் செய்தித்தாள் விநியோகத்தில் ஈடுபட்டிருந்தபோது இலங்கை ராணுவத்தின் எறிகணை வீச்சில் இவர் பலியானார்.

36. பெயர் : மகாலிங்கம் மகேஸ்வரன்
தொழில் : ஊடகப் பணியாளர். பத்திரிகையாளர்
கொலை செய்யப்பட்டது : 13 மார்ச். 2009. முல்லைத்தீவு
கூடுதல் கருத்துக்குறிப்பு : முல்லைத்தீவு மாவட்டத்தில் ஈழநாதம் செய்தி ஏட்டு விநியோகத்தை இவர் ஒருங்கிணைத்து வந்தவர். அதே நாளிதழில் இவர் செய்தியாளராகவும் பணியாற்றி வந்தார். பொக்கணைப் பகுதியில் சிங்கள ராணுவத்தின் தாக்குதலில் இவர் உயிரிழந்தார்.

37. பெயர் : அன்றன்
தொழில் : ஊடகப் பணியாளர்
கொலை செய்யப்பட்டது : மார்ச். 2009. முல்லைத்தீவு (திகதி கிடைக்கவில்லை)
கூடுதல் கருத்துக்குறிப்பு : ஈழநாதம் நாளிதழின் விநியோகஸ்தர் இவர். இரணைப்பாலை பகுதியில் இவர் செய்தித்தாள் விநியோகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது முன்னேறி வந்த இலங்கை ராணுவத்தின் தாக்குதலில் பலியானார். போரின் இறுதிநாட்களில் இவரது ஒட்டுமொத்த குடும்பமும் பலியானதாக தகவல் வெளியானது.

தொடரும்...

**ஆகாஸ்**



# சினி துளிகள்





## டைட்டில் பற்றி வெடித்த பிரச்சினை

இயக்குனர் விக்னேஷ் சிவன் அடுத்து இயக்கும் படத்தின் ஷூட்டிங் பூஜை உடன் தொடங்கியது. படத்தில் பிரதீப் ரங்கநாதன், க்ரித்தி ஷெட்டி, எஸ்ஜே சூர்யா உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். மேலும் நயன்தாராவும் கெஸ்ட் ரோலில் நடிக்கிறார் என கூறப்படுகிறது.

படத்திற்கு LIC - Love Insurance Corporation என டைட்டிலும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்த டைட்டில் தான் தற்போது புது பிரச்சினையை கிளப்பி இருக்கிறது.

**தயாரிப்பாளர் புகார்**

இயக்குனர் SS குமரன் என்பவர் ஏற்கனவே LIC என்ற டைட்டிலை பதிவு செய்து வைத்திருக்கிறாராம். அவரை அணுகி விக்னேஷ் சிவன் டைட்டில் வேண்டும் என கேட்ட நிலையில், அவர் தர முடியாது என மறுத்துவிட்டாராம். அதன் பிறகும் விக்னேஷ் சிவன் LIC என டைட்டிலை அறிவித்து இருப்பதற்கு SS குமரன் தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் கொடுத்து இருக்கிறார். LIC டைட்டிலை விக்னேஷ் சிவன் பயன்படுத்தக்கூடாது, மீறினால் அவர் மீது வழக்கு தொடர்வேன் எனவும் அவர் கூறி இருக்கிறார்.




## தனுஷ் இயக்கி நடிக்கும் 'D50'

கேப்டன் மில்லர் படத்தை அடுத்து தனுஷ். தனது 50 வது படத்தை அவரே இயக்கி நடித்துள்ளார். இப்படத்தை 'சன் பிக்சர்ஸ்' நிறுவனம் தயாரித்து இருக்கிறது. இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா. சந்தீப் கிஷன். விஷ்ணு விஷால். துஷாரா விஜயன். காளிதாஸ் ஜெயராம் எனப் பிரபலங்கள் நடித்துள்ளனர். இதற்கு டொப் இசையமைப்பாளர்களில் ஒருவரான ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். இந்த படத்தில் கேங்க்ஸ்டராக தனுஷ் நடிப்பதாகவும். இப்படத்திற்காக சென்னையின் பிரபல ஸ்டுடியோவில் பிரம்மாண்ட செட் அமைக்கப்பட்டு படத்தின் படப்பிடிப்பு நடந்து வந்தது. இந்நிலையில் தனுஷ். தனது எக்ஸ் தளத்தில். படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாகத் அறிவித்துள்ளார்.

#D50 #DD2wrapped. My sincere thanks to the entire crew and cast. Also a big thanks to Kalanithi Maran sir and Sun Pictures for supporting my vision.
— Dhanush (@dhanushkraja) December 14, 2023.

## வெற்றி கொடுத்த இயக்குனருடன் இணையும் ராகவா லோரன்ஸ்

ராகவா லோரன்ஸ் நடிப்பில் இந்த ஆண்டு மொத்தம் மூன்று திரைப்படங்கள் வெளிவந்தது. இதில் ருத்ரன் மற்றும் சந்திரமுகி 2 ஆகிய இரு திரைப்படங்களும் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை.

ஆனால், ஜிகர்தண்டா டபுள் எக்ஸ் திரைப்படம் மாபெரும் வெற்றியை ராகவா லோரன்ஸூக்கு கொடுத்துள்ளது. இந்நிலையில் ராகவா லோரன்ஸ் நடிப்பில் அடுத்ததாக உருவாகவுள்ள புதிய படம் குறித்து லேட்டஸ்ட் அப்டேட் வெளியாகியுள்ளது.

அதன்படி, இயக்குனர் மந்திரமூர்த்தி இயக்கத்தில் தான் தன்னுடைய படத்தை கமிட் செய்துள்ளாராம் ராகவா லோரன்ஸ். இந்த ஆண்டு வெளிவந்த சிறந்த திரைப்படங்களில் முக்கியமான திரைப்படம் அயோத்தி. இப்படத்தை இயக்கியவர் தான் இயக்குனர் மந்திரமூர்த்தி.

இவருடைய இயக்கத்தில் உருவாகும் அடுத்த படத்தில் ராகவா லோரன்ஸ் நடிக்கவிருக்கும் நிலையில், கோல்ட் மைன் பிலிம்ஸ் இப்படத்தை தயாரிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## இலங்கைக்கு வந்துள்ள நடிகை ரம்பா

சார் ரம்பா சார் என பார்த்திபன் அவரை பார்த்து சந்தோஷத்தில் ஒரு படத்தில் நின்றது போலவே இப்போதும் ரசிகர்கள் ரம்பாவை கொண்டாடுகிறார்கள்.

அவரின் இன்ஸ்டாவில் எப்போதும் புகைப்படம் போட்டாலும் சார் ரம்பா சார் என அதிக லைக்ஸ் குவிக்கும் ரசிகர்கள் உள்ளார்கள். அந்த அளவிற்கு 90களில் முன்னணி நாயகியாக வலம் வந்து ரசிகர்களை கட்டிப்போட்டவர்.

கடந்த சில மாதங்களாக நடிகை ரம்பா மீண்டும் நடிக்க வருகிறார் என்ற செய்திகள் உலா வருகிறது. ஆனால் எந்த அளவிற்கு உண்மை என தெரியவில்லை.

இந்த நேரத்தில் தான் நடிகை ரம்பா இலங்கை வந்துள்ளார். அவரது கணவர், 2 மகள்கள், ஒரு மகன் என குடும்பதோடு இலங்கை வந்துள்ள நடிகை ரம்பாவின் வீடியோ இப்போது சமூக வலைதளங்களில் வலம் வருகிறது.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



**சுழியோடி**

**30**

சிறிலங்காவிமானதளங்களில் இருந்து கிபிர் போன்ற போர் விமானங்கள் மேல் எழும்பும்போது விடுதலைப் புலிகளுக்கு தகவல் கிடைத்துவிடும். அவ்வாறு விமானங்கள் புறப்பட்டுவிட்டால் விடுதலைப்புலிகளின் முகாம்களுக்கு விழிப்புநிலை (அலேர்ட்) வழங்கப்பட்டுவிடும்.

குறிப்பாக பொறுப்பாளர்கள் உள்ள முகாமில் அலேர்ட் அறிவிக்கப்பட்டால் அவர்கள் பாதுகாப்பான பதுங்கு குழிக்குள் செல்வார்கள் அல்லது முகாமினை விட்டு வெளியே சென்றுவிடுவார்கள். இவ்வாறுதான் போராளிகளும் முகாமைவிட்டு வெளியே சென்று அல்லது பதுங்கு குழிக்குள் பாதுகாப்பிற்கான முன்னேற்பாடுகளை செய்து கொள்வார்கள்.

இது பின்பு பொதுமக்களுக்கும் தெரியவந்துவிட்டது. அதாவது அன்று விடுதலைப் புலிகளின் முதன்மை நிறுவனங்கள் மீது எதிரி தாக்குதல் நடத்துவான் என்ற அச்சத்தால் அங்கு வேலை செய்யும் பணியாளர்கள் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக அலேர்ட் கிடைத்தவுடன் அந்த நிறுவனத்தில் பொதுவாக எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் மணியோசை எழுப்பப்படும். இதனைத் தொடர்ந்து அங்கு வேலை செய்யும் பணியாளர்கள் பாதுகாப்பு தேடுவார்கள் அல்லது நிறுவனத்தை விட்டு வெளியே சென்று விடுவார்கள். இவர்களின் செயற்பாடுகளை மக்கள் அவதானித்து பொது மக்களும் பாதுகாப்பு தேடிக்கொள்வார்கள்.

இதில் சுவாரஸ்யமான சம்பவம் ஒன்றை இங்கே கூறலாம் என்று நினைக்கிறேன்.

கிளிநொச்சியின் கரடிபோக்கு சந்திக்கு அருகாமையில் யுஎன்எச்சிஆர் நிறுவன பணிமனைகள் இரண்டு அமைந்திருந்தன. ஒரு நாள் அவ்வழியால் நான் செல்லும்போது அவர்களது பணிமனை மதில்களை சுற்றி ஏராளமான தமிழ் மக்கள் குழுமி நின்றார்கள். நான் எனது உந்துருளியினை சற்று நிறுத்தி அங்கு நின்ற ஒருவரிடம் என்ன ஏதும் ஆர்ப்பாட்டமோ? என்று கேட்டேன். அது ஒன்றும் இல்லை. கிபிர் அலேர்ட் அறிவித்து இருக்கு அதுதான் பாதுகாப்புக்காக இங்கே வந்தனாங்கள் என்றார்கள். இவ்வாறுதான் கிபிர் அலேர்ட் கிடைத்தால் அங்கு மக்கள் யுஎன்எச்சிஆர் அலுவலகங்கள். உணவுத்திட்டம் கெயார் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் வளாகங்களைச் சுற்றி நிற்பார்கள்.

இவ்வாறான இடங்கள் மீது சிறிலங்கா வான்படை தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு. அன்று அவ்வாறுதான் விமானங்கள் வன்னி நோக்கி வருவதாக தகவல் கிடைத்திருந்த நிலையில் முகாம்கள் அனைத்திற்கும் விழிப்பு நிலை ஏற்கனவே கொடுக்கப்பட்டு இருந்தது.

தலைவர் நின்றிருந்த பகுதியைச் சுற்றியிருந்த முகாம்களுக்கு (இது சில குறியீடுகளுடன்) முகாம்களின் பொறுப்பாளர்களுக்கு அதியுச்ச விழிப்பு நிலை வழங்கப்பட்டிருக்கும். அவ்வாறு விழிப்பு நிலை வழங்கப்பட்டால் முகாம்கள் சிவப்பு எச்சரிக்கை நிலைக்கு வந்துவிடும். தகவல் கிடைத்து (10 அல்லது 20) நிமிடங்களில் வன்னி வான் பரப்பில் கிபிர்விமானங்கள் நுழையும். ஆனால் எந்த இடத்தின் மீது தாக்குதல்கள் நடக்கும் என்பது தாக்குதல் நடக்கும் வரை பெரும்பாலும் யாருக்கும் தெரியாது.

ஆனால் அன்று வன்னி நோக்கி வந்த கிபிர் விமானங்கள் தலைவர் நின்றிருந்த இடத்தையே இலக்கு வைத்திருந்தன. தலைவர் நின்றிருந்த இடத்தை துல்லியமாக இலக்குவைத்துதாக்கத்தொடங்கின. விமானத் தாக்குதல் குறித்து எச்சரிக்கை ஏற்கனவே வழங்கப்பட்டு இருந்ததால் தலைவர் அவர்களும் அவரது மெய்ப் பாதுகாவலர்களும் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து உயிர் தப்புகிறார்கள்.

எனினும் கிபிர் விமானத் தாக்குதல்கள் தலைவர் தங்கி நின்ற இடத்தின் மீது தாக்குதல் துல்லியமாக நடத்தப்பட்டால் தாக்குதல் குறித்து முதன்மை தளபதிகள் மத்தியில் சந்தேகங்கள் எழத் தொடங்கின.

விடுதலைப் புலிகளுக்குள் ஊடுருவியிருக்கும் கருப்பு ஆடொன்றின் வேலைதான் என்பது உடனடியாகப் புரிந்துவிட்டது. யார் அந்த கருப்பு ஆடு என்பதை கண்டுபிடித்து களைபிடுங்க வேண்டியது அவசியமாகிறது.

இந்த சம்பவம் முக்கிய கவனத்திற்கு எடுக்கப்பட்டு புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டு அம்மானின் புலனாய்விற்கு உட்படுத்தப்படுகின்றது. இதன் போது சில சந்தேகங்கள் தீர்க்கப்படுகின்றன.

இதற்கு முன்பாக தமிழீழ விடுதலை உணர்வாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான இ.சிவநேசன் அவர்கள் நாடாளுமன்ற அமர்வு முடித்துவிட்டு கிளிநொச்சி சென்றுகொண்டு இருக்கையில் மாங்குளத்திற்கு அண்மையாக (2008)ஆம் ஆண்டு சிறிலங்கா படையினரின் கிளைமோர் தாக்குதலில் சிக்கி மரணமடைந்தார். மேலும் சிலர் கிளைமோர் தாக்குதல்களில் இலக்குவைத்து கொல்லப்படுகின்றனர். அத்துடன் அன்றைய நாட்களில் விடுதலைப் புலிகளின் தளங்கள் மீதான துல்லியமான தாக்குதல்களை சிறிலங்கா படையினர் தொடர்ச்சியாக நடத்தியவண்ணம் இருந்தார்கள். எவ்வாறு துல்லியமான தாக்குதல்கள் நடைபெறுகின்றன, எவ்வாறு குறிப்பிட்ட நபர்களை இலக்குவைத்து கிளைமோர் தாக்குதலில் கொல்லப்படுகிறார்கள் என்று பொறுப்பாளர்கள், போராளிகள் மத்தியில் பல்வேறுபட்ட கேள்விகள் எழுகின்றன.

சட்லைட் சாதனம் ஊடாக நாடுகள் வன்னியை கண்காணித்து கொடுக்க அதனைக்கொண்டு இலக்குகளை சரியாக தாக்குகிறார்களோ என்ற கேள்வி பலரது மனங்களில் இருந்தது. ஆனால் உண்மை பெரும்பாலும் அதுவல்ல.

விடுதலைப்புலிகளின் புலனாய்வு துறையினை எடுத்துக்கொண்டால் புலனாய்வு துறையின் உள்ளக பாதுகாப்பு அணிக்குப் பொறுப்பாளராக காந்தி அம்மான் எனப்படும் காந்தி பொறுப்பாளராக செயற்பட்டுக் கொண்டு இருந்தார்.

காந்தி அம்மானின் விசாரணைக்கு ஒரு குற்றவாளி செல்வாராயின் அவர் தன்னை அறியாமலே குற்றங்களை ஒப்புக்கொள்வார். இவரது பெயரை சொன்னாலே பலரும் நடுங்குவார்கள்.

உள்ளக பாதுகாப்பு பொறுப்பாளரான இவருக்கு தலைவர் அவர்கள் சென்றுவரும் இடங்களும் தளபதிகளின் இருப்பிடங்கள், தளபதிகள் அன்று செல்லும் இடங்கள் குறித்த விபரங்கள் அனைத்தும் தெரிந்திருந்தது.

பெரும்பாலும் தளபதிகள் பயணம் செய்யும் வீதிகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான பணிகளை மேற்கொள்வதும் இவர்தான்.

அத்துடன் எதிரியின் ஊடுறுவல்களை கண்டுபிடித்து தீர்வு எழுதுவதும் இவர் பணியாக இருந்தது.

சமாதான காலத்தில் வன்னி பகுதி மீது எதிரியின் ஊடுருவல்களை தடுக்கும் முயற்சியில் இவர் தீவிரமாக ஈடுபட்டவர். (அதாவது சிவில் நிர்வாகம் ஊடாக)

இவ்வாறு விடுதலைப் புலிகளின் நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் உரியவராக காந்தி இருந்தார்.

தலைவரின் அன்றைய பயணத்திட்டத்தை தெரிந்து இருந்தது இவர்தான். இவரின் மீது பொட்டு அம்மானுக்கு சந்தேகம் அதிகமாக வலுத்தது.






தொடரும்...

# "இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம் என்பது பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடர்புடையது"

– பேராசிரியர் சி.பத்மநாதன் –

கடந்தவாரத் தொடர்ச்சி...

அதுமட்டுமன்றி இவர்கள் யுனெஸ்கோ மூலமாக வருவதனாலும் இலங்கை அரசாங்கத்தின் நிறுவனமான தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணையோடு அகழ்வுகளை செய்வதாலும், எந்தளவிற்கு வெளிப்படைத்தன்மையை இவற்றிலே காண முடியும் என்பது கேள்விக்குறியானது. ஏனெனில், ஒரு துறை அரசியல் மயமாக்கப்பட்டிக்கின்ற போது, வெளிநாடுகளிலிருந்து பங்கு கொள்பவர்களும் ஏதோவொரு காரணமாக கட்டுப்பாடுகளுள் அடங்க வேண்டிய தேவைகள் இருக்கும் போது வெளிப்படையான கருத்துக்களை நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? உதாரணமாக அநுராதபுரத்திலும் திஸ மகாராமவிலும் அகழாய்வுகளை நடத்திய வெளிநாட்டவர்கள் அங்கு பானையோடுகளில் உள்ள எழுத்துக்களை பற்றி அறிக்கை வெளியிட்டனர். ஆனால் மாந்தையில் அகழாய்வு நடத்தியவர்கள் அதை செய்யத் தவறிவிட்டார்கள். அதுவும் சற்று பிந்திய காலத்தில் தான் துறைமுகம் சிறப்புப் பெற்றது என்ற காரணத்தினால் பானைகளில், மட்பாண்டங்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவர்களின் அறிக்கையில் அது பற்றி ஒரு கதையும் கதைக்கவில்லை.

இரண்டாவதாக பல ஆண்டுகளுக்கு முன்பு பல்கலைக்கழக மாணவர்களோடு திருக்கேதீஸ்வரம் சென்றபோது அகழாய்வு நடந்த ஒரு இடத்தை நாங்கள் பார்க்கப் போனோம். அங்கே சில மாணவர்கள் பொறுக்கியெடுத்த தரை மேல் காணப்பட்ட கலவோடுகள் சிலவற்றில் தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றை நாங்கள் ஒரு நூலிலும் வெளியிட்டுள்ளோம். அவற்றை வாசிக்கத் தெரிந்தவர்கள் அவற்றை அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

இதுபோல கந்தரோடையில் Poul E Peris அகழாய்வு செய்தபோது அவரிடம் பிராமிஎழுத்துக்களை வாசிக்கும்தன்மையை நாங்கள் எதிர்பார்த்திருக்க முடியாது. பின்புசென்ற நூற்றாண்டிலே 66ஆம் ஆண்டில் அகழாய்வுகளை நடத்தியபோது அவர்கள் எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் குறித்த எதுவித கதையும் இல்லை. ஆனால் அவற்றில் கிடைத்த கலவோடுகள் யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் காணப்படுகின்றன. கலவோடுகளிலும், சுடுமண் கட்டிகளிலும், களிமண் கட்டிகளிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் தமிழ் மொழியில் உள்ளன. தமிழ்ப் பிராமியில் உள்ளன. இதை ஒப்புக்கொள்வதற்கு அங்குள்ளவர்களே தயங்குகின்றனர். அப்பொழுது மற்ற இடங்களில் ஆய்வுகளை செய்தால் என்ன நடக்கும். இன்றைய நிலையில் ஆய்வுகளை செய்தால், இப்படியான சில குறைகள், தவறுகள், மௌனங்கள் காணப்படும். மற்றது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையினர் கந்தரோடையிலும், வன்னி மாவட்டங்களிலுள்ள நாகபடுவான், கட்டுக்கரைக் குளப்பகுதியிலும் அகழாய்வு களை மேற்கொண்டிருக்கிறார்கள். பின்னைய இரண்டிலும் காணப்பட்ட பொருட்கள் மிக முக்கியமானவை.

நான் முன்பு சொன்ன கருத்துக்களுக்கு அழுத்தம் அளிக்கின்ற வகையில் அவர்களுடைய கண்டுபிடிப்புக்கள் அமைந்தன. பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள் அந்த அகழ்வுகளில் கிடைத்துள்ளன. கரும் செம் மட்பாண்டத் துண்டங்கள், சில வழிபாட்டு சின்னங்கள், கரும் செம் மட்பாண்டத் துண்டங்களோடு குளக்கட்டிலுள்ள சிவப்பு மட்பாண்டங்கள், றுலல் (rulel pottery) மட்பாண்டங்கள், ரோமர் காலத்து நாணயங்கள், நாகர் வழங்கிய காசுகள் போன்றவை அங்கு கிடைத்துள்ளன. இவற்றை பற்றிய அறிக்கைகள் வெளிவரவில்லை. பத்திரிகைகளில் வெளியிட்ட சில கட்டுரைகளைக் கொண்டே இவற்றை நாம் அறிய முடிந்தது. இருந்தும் வன்னியில் நடைபெற்ற அகழ்வுகளை இவர்களால் தொடர முடியவில்லை. மேலிடத்திலிருந்து அனுசரணை கிடைக்கவில்லை. இவற்றை பற்றிய அறிக்கைகளும் வெளிவரவில்லை.

கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை அங்கு அகழாய்வுகளை மேற்கொள்ளக்கூடிய தகைமையை எவரும் இன்னும் பெறவில்லை. தொல்பொருள் சின்னங்களை தேடுவதற்கு கூட அவர்கள் முயற்சி மேற்கொள்ளவில்லை. அந்த நிலையில் அந்த நிறுவனத்தைப் பற்றி பேசுவது இப்பொழுது பொருத்தமாகாது. முறையான அகழ்வுகளை செய்து வெளிப்படையாக விபரங்களை பெற வேண்டுமானால், இலங்கை அரசியலமைப்பில் மாற்றம் ஏற்படவேண்டும். அதிகமான அதிகாரப்பரவல் இந்திய மாநிலங்களுக்குரிய வகையில் ஏற்பட்டால் தான் இவற்றை உரிய முறையில் கொண்டு செல்ல முடியும். இப்பொழுது மாகாண சபையின் அதிகாரங்களில் பொதுப் பட்டியலில் தொல்லியலும் அருங்காட்சியகங்களும் இடம்பெறுகின்றபொழுதிலும் மாகாண சபைகளினாலே இவை தொடர்பாக எதையும் மேற்கொள்ளவில்லை. நிறைவேற்று அதிகாரம் ஆளுநரின் வசம் இருப்பதே இதற்கான காரணம்.

தமிழ்நாட்டில் கீழடி பற்றிய அகழாய்வுகள் சர்வதேச பரிணாமத்தைப் பெற்றுள்ளன. அங்கு மத்திய அரசின் தொல்லியல் திணைக்களம் நாட்டின் பல பாகங்களில் அகழ்வுகளை வெளிப்படைத் தன்மைகளோடு செய்கின்றது. அதுமட்டுமன்றி தமிழ்நாட்டு தொல்லியல் துறை தான் கீழடியில் பெரும்பாலான அகழ்வுகளை செய்கிறார்கள். அப்படியான ஒரு நிலை இந்த நாட்டில் இல்லை. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் எங்கே அகழ்வு செய்வது அதனால் என்ன பலன் என்று சிந்திப்பதில் எந்த ஒரு பலனும் இருக்காது.

**கேள்வி - உரிய விழிப்புணர்வு இன்மை, சுயநலம் போன்றவற்றாலும் எமது வரலாற்று முதுசங்கள் அழிந்துபோகின்றன என கவலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. பல்வேறு இடங்களிலும், நேரடிக் கள ஆய்வில் ஈடுபட்ட ஒரு தொல்லியலாளர் என்ற வகையில் இதற்கான எடுத்துக் காட்டுக்கள் சிலவற்றை கூறமுடியுமா?**

பதில்-நான்ஒருபயிற்சிபெற்றதொல்லியலாளர் அல்ல. வரலாற்றாசிரியர் என்ற முறையில் தொல்லியலில் ஈடுபாடு உண்டு. அத்தோடு தமிழ்ப் பிராமி எழுத்துக்களை வாசிக்கும் திறன் பெற்றிருப்பதனாலும் இவற்றைப் பற்றி பேச முடியும். விழிப்புணர்வு என்பது தமிழ் பேசும் மக்களிடையே அடிமட்டத்தில் தான் இருந்து வருகின்றது. எங்களின் ஆலயங்களில் அந்தணர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அட்சகர்களாக கடமை செய்து முடிந்ததும் போய் விடுவார்கள். ஆனால் ஒரு சிலரைத் தவிர மாவிட்டபுரம், கீரிமலை, அகஸ்தியர் ஸ்தாபனம் ஆகியவற்றில் உள்ளவர்களைத் தவிர மற்றைய ஆலயங்களுக்கு பொறுப்பான வர்களும் அங்கே வழிபாடு நிகழ்த்தும் பூசகர்களும் எதுவிதமான அக்கறையும் கொள்வதில்லை. கீரிமலை தொல்பொருள் சின்னங்களை பார்க்கப்போனால் அதைக் காட்டுவதற்கு தயக்கம் உள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். கிழக்கிலங்கையில் இவ்வாறானவர்கள் கூடுதலாக இருக்கி றார்கள். உதாரணமாக பிரபலமான ஆலயமான தான்தோன்றீஸ்வரத்தைக் கூறலாம். ஒப்பீட்டளவில் பௌத்த சமயம் தொடர்பான சின்னங்களை பொறுத்தவரையில் பௌத்த சங்கத்தார் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாய் இருக்கிறார்கள். மலை நாட்டுப் பகுதிகளுக்குப் போனால் அங்கு அவர்கள் விகாரையிலே பல ஏடுகளை, பட்டயங்களை தொல்பொருள் சின்னங்களை வைத்திருப்பதைக் காணலாம். அது மட்டுமன்றி தென்னிலங்கையிலே அங்குள்ள ஊடகங்கள் சிலவற்றிலும் காலாகாலமாக தொல்பொருள் சின்னங்கள், பண்பாட்டுச் சின்னங்கள் பற்றி விபரமாக எழுதுகிறார்கள். அந்த முறை தமிழ் ஊடகங்களில் காணப்படவில்லை. அவற்றிலே ஆசிரியர்களாக கடமை புரிபவர்களும், அதிகமாக எங்கள் பல்கலைக்கழகங்களில் பயிற்சி பெற்றவர்கள் தான். அவர்களின் கவனம் வேறு விடயங்களில் தான் செல்கிறது. அன்றாட அரசியலுக்கு முக்கியம் அளிக்கப்படுகின்றது.

தலைநகரில் உள்ள விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ஆனால் அந்த செய்தித்தாள்களை படிக்கின்றவர்கள் எங்கு வாழ்கிறார்கள். அவர்களின் பிரச்சினைகள் என்ன என்று அக்கறை செலுத்துவதில்லை. பிராந்தியப் பத்திரிகைகளின் விரித்தாந்தங்கள் மிக மோசமானது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காணப்படும் பத்திரிகைகள் எதுவும் அண்மையில்தொல்பொருள்சின்னங்களைப் பற்றி எதுவும் சொல்வதில்லை. விழிப்புணர்வு என்பது ஒரு ஒப்பீட்டளவிலான விடயம். இப்பொழுது பெருமளவிலான விழிப்புணர்வு 2 மாகாணங்களில் ஏற்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் எங்களின் நூலைப் பற்றி அறிந்தவர்களிடையே இவ்வளவு பொருட்கள் இங்கு இருக்கின்றனவா? இவ்வளவு பெரிய நாகரீகம் எங்களுக்கு மூலமானதா என்ற சிந்தனை வெளிநாடுகளில் வாழுகின்ற படித்தவர்கள் மத்தியில் தோன்றிவிட்டது.

அதேபோல் வடமாகாணத்தில் 4 மாதங்களுக்கு முன்பு ஆறு திருமுருகன் ஒரு பாரிய கட்டடத்தை நாவற்குழியில் ஒரு அருங்காட்சியகத்திற்கான நிலையமாக அமைத்துள்ளார். அதற்கு இங்குள்ள செல்வந்தர்களும், வெளி நாட்டிலுள்ளவர்களும் பெருந்தொகையான பணம் கொடுத்து அதை அமைப்பதற்கான செலவுகளைக் கொடுத்துள்ளார்கள். கட்டிடம் மிகவும் பிரமாண்டமானது. பரந்தளவில் அந்தப் பொருட்களை வைக்க முடியும். எந்தளவிற்கு தேடியிருக்கிறார்கள் என்பதை நான் இப்பொழுது சொல்ல முடியாது. முக்கிய விடயம் என்னவென்றால், முதல்நாள் திறப்புவிழா தொடர்பான கூட்டத்திலே 5000இற்கும் குறைவில்லாத மக்கள் கலந்து கொண்டனர். அதிகமாக குடா நாட்டிலும், தீவகத்திலும் வழிபாடு நடத்துகின்ற அந்தணர்கள், கல்லூரி, கச்சேரி, கல்வித் திணைக்களத்தில் உயர் பதவிகளைப் பெற்றிருக்கிற அதிகாரிகள், முதலான எல்லோரும் ஆண்களும் பெண்களுமாக வந்து கூடியிருந்தார்கள். தமிழாராய்ச்சி மாநாடு 1974இல் நடைபெற்றபோது தான் மிகக்கூடிய சனம் கலந்துகொண்டது.

## சிவபூமி அருங்காட்சியகம்

அதற்குப் பிறகு இந்த திறப்பு விழாவிலே தான் காணமுடிந்தது ஏனென்றால், அங்கு அதிகார வர்க்கத்தினுடைய கட்டுமானங்கள், அதிகாரங்கள், செல்வாக்குகள் இல்லை. சமுதாயத்தினுடைய அபிமானத்தை யும், பெருமதிப்பையும் பெற்ற ஒருவர் அனைவரின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவர் தொடக்கியிருக்கின்றார். அதனாலே அவருக்கு ஆதரவு உண்டு. அதன் மூலமாக ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கையின் ஏனைய பாகங்களில், வட கிழக்கு மாகாணங்களில் ஏனைய பாகங்களைப் பொறுத்தவரையில் இந்தவிதமான முயற்சிகளை மேற்கொள்ள முடியும் என்றால் அங்கு பெருந்தொகையான தொல்பொருள் சின்னங்கள் இருக்கின்ற பொழுதிலும் முன்வருவார் எவரும் இல்லை. அங்கும் செல்வந்தர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் வெளிநாடுகளில் உள்ளவர்கள் இந்த முயற்சிகளை மேற்கொண்டால் பிராந்திய வேறுபாடு இன்றி உதவி செய்யக்கூடியவர்களும் இருக்கின்றாரக்ள். ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற நிலை இருக்கின்றது. ஒரு தொல்லியல் தொடர்பான அருங்காட்சியகத்தை அமைப்பதே வலு சிரமமாக இருக்கின்றது. ஹிஸ்புல்லாஹ் காத்தான்குடியில் ஒரு இஸ்லாமிய அருங்காட்சியகத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இதை முன்னுதாரணமாகக் கொண்டு மற்றவர்கள் ஏன் இதை செய்ய முடியாது?

**கேள்வி - தமிழினத்தின் தொன்மைச் சான்றுகளை அழிவிலிருந்து காப்பாற்ற தற்போதைய சூழலில் நாம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நீங்கள் கருதுகின்றீர்கள்?**

பதில் - பலவிதமான வழிகளில் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஒன்று குறிப்பாக தொல்லியல்துறை திணைக்களமே இதற்கு பொறுப்பாக இருப்பதால், அவர்களை இந்தச் சின்னங்களை உரிய முறைப்படி பேணிக்கொள்வதற்கும், ஈடுபாடு உள்ளவர்கள் பார்த்து ஆராய்வு செய்வதற்கு அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும். அத்தோடு தொல்பொருள் சின்னங்கள் இருக்கும் இடங்களில் வேறு நாடுகளைப் போல உரிய கட்டிடங்களை அமைப்பதற்கோ அவற்றை அடிப்படையாகக் கொண்டு குடிகளை நிறுவுவதையோ தவிர்க்கவேண்டும். வழிபாட்டு சின்னங்கள் அவை எந்தச் சமயத்தைச் சேர்ந்தாலும் ஒரு பொதுவான கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். மற்றது பொது மக்கள் தம்மால் இயன்றவரை இவற்றை அடையாளப்படுத்தி பாதுகாப்பதற்கான ஒரு வழிமுறையை உருவாக்கவேண்டும்.

இவர்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பிரதேச சபை மட்டத்திலும், மாகாண சபை மட்டத்திலும், பாராளு மன்றத்திலும் அங்கத்தவர்களாக இருக்கிறவர்களுக்கு அதிகபட்ச வலியுறுத்தல்களை வழங்கவேண்டும். ஏனெனில் இவர்களுக்கு இயலுமான வகையில் இவை தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளக்கூடிய சாத்தியங்கள் உண்டு. அதிகாரம் இல்லை என்பது வேறு விடயம். ஆனால் இவற்றைப் பற்றி பேசக்கூடிய சாத்தியங்கள் உண்டு. அதேபோல பிரதேச சபை, மாகாண சபைகள் ஊடாக இப்பொழுது அடையாளம் காணப்பட்ட சின்னங்களை எல்லாம் எடுத்து பாதுகாப்பாக வைப்பதற்கு வழிவகை தேடவேண்டும். ஆலயங்கள் குறிப்பாக முன்னேஸ்வரம், மாவிட்டபுரம், வன்னியிலுள்ள கோயில்கள் அகஸ்தியர் ஸ்தாபனம், போன்றவை கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரம் போன்றவை தங்களின் வசமுள்ள எஞ்சியுள்ள பொருட்களையாவது பாதுகாப்பதற்கு கோவில்களில் அருங்காட்சி யகங்களை உருவாக்கி பாதுகாப்பாக வைத்துக்கொள்ளலாம்.



தொடரும்...

# ‘Operation Trust’ - நாடு கடந்த தமிழீழ அரசைக் கவிழ்க்கத் திட்டம்

கடந்தவாரத் தொடர்ச்சி...

சித்திரவதைகள், விசாரணை, துப்பாக்கிச்சூடு என்று மிகவும் சோகமாக முடிவடைந்தது பிரபல்யமான, திறமையான ஒரு வீரனின் வாழ்க்கை. அதுமாத்திரமல்ல, இவர் போன்று புலம்பெயர்ந்த நாடுகளில் ரஷ்ய ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த பல புரட்சியாளர்கள், தேசப்பற்றாளர்கள், தேசியவாதிகள் ஏமாற்றப்பட்டார்கள். படுகொலை செய்யப்பட்டார்கள். காணாமல் போனார்கள், கடத்தப்பட்டார்கள். செயலிழக்க வைக்கப்பட்டார்கள். இதுதான் "Operation Trust" என்ற இராணுவ நடவடிக்கை. உலக அளவில் மிகவும் வெற்றிகரமான ஒரு உளவு நடவடிக்கை. உலக நாடுகளின் புலனாய்வுப் பிரிவினருக்கான ஒரு முக்கிய பாலர் பாடம்தான் "Operation Trust" என்ற இந்த இராணுவ நடவடிக்கை.

இப்பொழுது உள்ள மிகப் பெரிய கேள்வி இதுதான். "Operation Trust" போன்ற ஒரு உளவு நடவடிக்கையை புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்து சிறிலங்கா இராணுவம் மேற்கொள்கின்றதா? கொஞ்சம் சிக்கலான கேள்விதான். ஆனாலும் புலம்பெயர் தமிழர்கள் பெரிதாக யோசித்தேயாகவேண்டிய கேள்வி. ஆம் மேற்கொள்ளப்படுகின்றது என்று உறுதியாகக் கூறுவதற்கு என்னிடம் போதியளவு ஆதாரம் கிடையாது. ஆனால் அப்படியான ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கான சந்தர்ப்பங்களும். சாத்தியங்களும் நிறையவே இருக்கின்றன என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

**அந்தச் சாத்தியங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.**

முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள், தளபதிகள், போராளிகள் என்று ஏராளமானவர்கள் 'கொத்தாக' சிறிலங்கா இராணுவத்தின் கரங்களில் கிடைத்தார்கள். அவர்களை முழுக்க முழுக்க சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர்தான் கையாண்டு வருகின்றார்கள். அப்படித் தமது கரங்களில் கிடைத்தவர்களை அரசியல் ரீதியாகவும். இராணுவ ரீதியாகவும் பயன்படுத்தி வருகின்ற சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு, அவர்களை நிச்சயம் தமது புலனாய்வுத் தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் வைத்திருக்கமாட்டார்கள்.

இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அனைத்து செயற்பாடுகளும் இலங்கையில் ஓரளவு முழுமையாகவே அழிக்கப்பட்டுவிட்ட நிலையில், விடுதலைப் புலிகள் வசம் இருந்த ஆயுதங்கள், அவற்றை இயக்கக்கூடியவர்கள் என்று அனைத்துமே சிறிலங்கா இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுவிட்ட நிலையில், புலம்பெயர் சமூகத்தின் செயற்பாடுகள்தாம் சிறிலங்கா தேசத்தை கொஞ்சம் சங்கடத்தில் ஆழ்த்தும்படியாக இருந்து வருகின்றன. எனவே சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு தனது அத்தனை பலத்தையும் நிச்சயமாகப் புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்துத்தான் திருப்பி விட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

**சரி, புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்து சிறிலங்காவின் புலனாய்வுப் பிரிவு என்ன செய்யலாம்?**

செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்கள், சமூகத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள் போன்றவர்களை விலைபேசலாம். மிரட்டலாம். ஆனால் விலைபோகக்கூடியவர்கள் அனைவரும் ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்னரே விலைபோய்விட்டார்கள். சிங்களத்தின் மிரட்டல்களுக்கு கலங்கக்கூடியவர்கள் மீதும் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவும் அதன் கூலிகளும் கைவைத்து நீண்டநாட்களாகிவிட்டன. இவை எதற்கும் அகப்படாமல் எஞ்சியிருப்பவர்கள்தான் சிங்களத்திற்கு தற்பொழுது பிரச்சினை. எதற்கும் அஞ்சாமல், எதற்கும் விலைபோகாமல் புலம்பெயர் தேசங்களில் ஓர்மமாக நின்றுகொண்டிருப்பவர்கள் பற்றித்தான் சிறிலங்கா கொஞ்சம் சிந்திக்கின்றது. கவனமெடுக்கின்றது.

**எதற்கும் அடிபணியாமல் வீரமாக புலம்பெயர் தேசங்களில் நின்று போராடும் அப்படிப்பட்ட மறத் தமிழர்களை என்னசெய்யலாம்?**

இது பற்றிப் பார்ப்பதானால், சுமார் ஒன்றரை வருடங்கள் நாம் பின்நோக்கிச் செல்லவேண்டும். முள்ளிவாய்க்கால் முடிவினைத் தொடர்ந்து அப்பொழுது ஒரு பெரிய வெற்றிடம் காணப்பட்டது. புலிகளை தாம் முற்றாகவே அழித்துவிட்டதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்தது. தளபதிகள், போராளிகள், ஆதரவாளர்கள், மக்கள் என்று அனைவரையுமே சிறைக்குள் தள்ளிவிட்டு, தனது வெற்றியை பல நாட்கள் கொண்டாடியது சிங்களத் தலைமை.

ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் தமது வெற்றிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய சில ஆபத்துக்கள் இலங்கையில் பரவலாக மறைந்து இருந்ததை சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு உணர்ந்தது. அதாவது, வடக்கு கிழக்கு, மற்றும் தென் இலங்கைக் காடுகளில் ஆயுதங்களுடன் புலிகளின் சிறிய சிறிய அணிகள் நிலைகொண்டிருந்தன. அதேபோன்று கொழும்பிலும், தென் இலங்கையிலும், புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் மக்களோடு மக்களாக கலந்து வாழ்ந்துகொண்டிருந்தார்கள். உத்தரவு கிடைத்ததும் செயற்படுவதற்கென்று ஏராளமான தற்கொலைப் போராளிகளும் பல இடங்களிலும் மறைந்திருந்தார்கள். புலிகள் மீதான வெற்றி என்று கொண்டாடிக்கொண்டிருந்த சிங்களத்திற்கு, இந்த விடயம் ஒரு பெரிய அச்சுறுத்தலாகவே இருந்தது.

வடக்கு கிழக்கில் உள்ள காடுகளிலும், தென் இலங்கை மற்றும் தலைநகர் கொழும்பிலும் பயங்கர ஆயுதங்களுடன் மறைந்திருக்கும் நூற்றிற்கும் அதிகமான விடுதலைப் புலி உறுப்பினர்களை கண்டுபிடிக்கவேண்டும். அழிக்கவேண்டும். இந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு, ஒரு இரகசிய நடவடிக்கையை மேற்கொண்டது. அந்த நடவடிக்கை கிட்டத்தட்ட ‘Operation Trust’ உளவு நடவடிக்கையை ஒத்ததாகவே இருந்தது. தம்மிடம் சரணடைந்த அல்லது தம்மால் கைது செய்யப்பட்ட சில விடுதலைப் புலி முக்கியஸ்தர்களை சித்திரவதை செய்து, அவர்களது மனைவி குழந்தைகளைப் பணயம் வைத்து, மிகவும் கவனமாக ஒரு இரகசிய நடவடிக்கையை மேற்கொண்டது சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு.

அதாவது, முள்ளிவாய்கால் நடவடிக்கையின் பொழுது சிறிலங்கா இராணுவத்தால் கைப்பற்றப்படாமல் சில தளபதிகள், ஒரு தொகுதி விடுதலைப் புலி உறுப்பினர்கள் தப்பித்து வன்னிக் காடுகளில் உள்ள நிலக்கீழ் சுரங்கங்களில் மறைந்திருந்து செயற்படுவது போன்ற ஒரு தோற்றப்பாடு திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் ஏற்பாடு செய்த குழு, பல்வேறு இடங்களில் மறைந்திருந்த போராளிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தாம் மீள ஒருங்கிணைந்து போராடவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்கள். தம்மை அழித்த சிறிலங்காப் படையினரைப் பழிவாங்கவேண்டும் என்று சபதம் எடுத்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் புலம்பெயர் நாடுகளில் தேசியம் பேசிக்கொண்டிருந்த ஒரு தரப்பினரால் அவிழ்த்துவிடப்பட்ட கதைகளும், மாயைகளும் கூட, சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினரின் இந்த இரகசிய நடவடிக்கைக்குப் பெரிதும் உதவவே செய்தன. 'அதோ அவர் அங்கே இருக்கின்றார். இதோ ஐயாயிரம் பேருடன் அந்த தளபதி வன்னியில் மறைந்திருக்கிறார்'.. புலிகள் வன்னியில் இன்று தாக்குதல். பல இராணுவத்தினர் காயம், ஆனால் செய்தியை சிறிலங்கா அரசாங்கம் மறைத்துவிட்டது... வன்னியில் பல சிறிலங்கா படையினரைக் காணவில்லை.. - இதுபோன்று புலம்பெயர் தமிழர்களில் ஒரு பிரிவினர் ஆர்வக்கோளாறினால் மேற்கொண்ட பிரச்சாரங்கள், சிறிலங்கா படையினர் மேற்கொண்ட அந்த இரகசிய நடவடிக்கைக்குப் பெரிய அளவில் கைகொடுத்தது. மீள ஒருங்கிணைய முயன்றவர்கள் சிறிலங்காப் படையினரிடம் வசமாகவே மாட்டிக்கொண்டார்கள். பல கரும்புலிகள்கூட இந்த இரகசியச் சதி நடவடிக்கையின் பொழுது அகப்பட்டுக்கொண்டார்கள். பல ஆண்டுகள் கொழும்பிலும் அதன் சுற்றுவட்டத்திலும் இரகசியமாகச் செயற்பட்டு வந்த புலிகளின் பல உளவாளிகள் சிறிலங்காப் படையினரிடம் மிக இலகுவாகவே அகப்பட்டுக்கொண்டார்கள். சிறிலங்கா புலனாய்வாளர்களால் இயக்கப்பட்ட இந்த அணியினர் புலம்பெயர் தேசங்களில் செயற்பட்ட முக்கிய செயற்பாட்டாளர்களையும் தொடர்புகொண்டு, பல்வேறு தகவல்களைப் பெற்றார்கள். பெருமளவு பணத்தை அனுப்பிவைக்கும்படி கேட்டு அதனைப் பெற்றார்கள். வெளிநாடுகளில் இருந்த செயற்பாட்டாளர்களுடன் இலங்கையில் தொடர்புகளில் இருந்த நபர்களையும் தமது இந்த நடவடிக்கையினூடாகக் கண்டுபிடித்தார்கள்.

இப்பொழுது மறுபடியும் பழைய **கேள்விக்கு வருவோம். இதேவகையிலான நடவடிக்கையை புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்து சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு செய்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளதா? நிச்சயமாக உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.**

தமிழ் தேசியத்தின் மீது புலம்பெயர் தமிழர்கள் கொண்டுள்ள வெறி: புலம்பெயர் தமிழர்களின் மிகப் பெரிய பலம் என்பது உண்மையே. அதேவேளை இந்த வெறிதான் புலம்பெயர் தமிழர்களின் மிகப் பெரிய பலவீனம் என்பதையும் நாம் ஒப்புக்கொண்டுதானாகவேண்டும். 'தமிழ் தேசியம்' என்று கூறிக்கொண்டு யாரும் எம்மை இலகுவாக ஏமாற்றிவிடும் அளவிற்கு இந்த வெறிக்கு நாம் அடிமையாகிக் கிடக்கின்றோம். பல வியாபாரிகள் தேசியம் பேசி எம்மை, எமது பொருளாதாரத்தை வளைத்துப் போடுவதை நாம் தெரிந்துகொண்டே அனுமதித்துக்கொண்டிருக்கின்றோம் தேசியத்தின் பெயரால். எனவே எமது மிகப் பெரிய பலமாக நாங்கள் நினைத்துக்கொண்டிருக்கின்ற தேசியத்தின் மீதான எமது கண்மூடித்தனமான பற்று, மிதமிஞ்சிய வெறி - இவற்றினையே எமக்கு எதிரான தமது நகர்வுகளுக்கு எமது எதிரி பயன்படுத்த முனையும் சந்தர்ப்பம் இருக்கவே செய்கின்றது. 'இல்லை இல்லை.. அது ஒருபோதும் முடியாது..' என்று சிலர் கூறலாம். ஆனால் தாம் நேசிக்கின்ற தேசியத்தின் பெயரால் இன்று சில தேசியவாதிகள் தெருவில் நின்று சட்டையைக் கிழித்துக்கொண்டு அடிபடுவது எமது பலவீனத்திற்கு ஒரு சிறந்த உதாரணம். எம்மைவிட வேகமாக தமிழ் தேசியம் பேசிக்கொண்டு Operation Trust உளவு நடவடிக்கை எம்மத்தியில் மேற்கொள்ளப்படக்கூடியதற்கான சாத்தியத்தை நாம் இலகுவாக உதறித்தள்ளிவிட முடியாது. இந்தியாவில் புலிகள் மீள ஒருங்கிணைகின்றார்கள்; என்ற கதை எம்மவர்கள் மத்தியில் தற்பொழுது மிக வேகமாக பரவிக்கொண்டிருக்கின்றது. இந்தக் கதையின் தோற்றுவாய் எது என்று பார்த்தால் - சிறிலங்காவின் பாராளுமன்றத்தில்தான் இந்தக் கதை முதன்முதலில் அவிழ்த்துவிடப்பட்டது. அதுவும் சிறிலங்காவின் பிரதமர்தான் இந்தக் கதையை பகிரங்கமாகத் தெரிவித்தார். அவர் சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவினரை மேற்கோள்காட்டித்தான் இந்தக் கதையைத் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்பட்ட பல விடுதலைப் புலி முக்கியஸ்தர்கள், திடீரென்று புலம்பெயர் நாடுகளில் தோன்றி தேசியம் பேசுவது இன்று சாதாரண நிகழ்வாக மாறி வருகின்றது. 'நான் வன்னியில் தலைவருடன் நின்றனான்... - என்று கூறிக்கொண்டு நிறையப் பேர் ஐரோப்பாவில் தற்பொழுது அரசியல் செய்ய ஆரம்பித்துளார்கள். 'தலைவருடன் நின்ற நீங்கள் எப்படித் தப்பி வந்தீர்கள்?" "ஏன் தலைவரை விட்டுவிட்டு இங்கு வந்தீர்கள்?" - இதுபோன்ற கேள்விகளை நாங்களும் கேட்பதில்லை. அதற்கான பதிலை அவர்களும் சொல்வதில்லை. இன்றும் குறிப்பாகப் பார்த்தால், இவர்களில் அனேகமானோர் சிறிலங்கா விமான நிலையம் வழியாகவே வந்திருக்கின்றார்கள். இவர்களில் பலர், வவுனியாவில் சிறிலங்கா தடுப்பு முகாமில் மாதக்கணக்காக சிறிலங்காப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்கள். வன்னியில் புலிகளுக்குச் சாப்பாடு கொடுத்தவர்கள், சென்றியில் நின்றவர்கள், எல்லைக் காவல் கடமைகளில் ஈடுபட்டவர்கள் என்று பலரும் இப்பொழுது கூட சிறிலங்கா படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நிலையில், அனைவரும் அறிந்த விடுதலைப்புலி முக்கியஸ்தர்கள், தவைருடன் இருந்தவர்களால் எப்படி சிறிலங்கா இராணுவத்தின் வாய்களுக்குள் இருந்து வெளியேற முடிந்தது? எப்படி சிறிலங்கா படையினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு சிறிலங்காவின் ஒரே சர்வதேச விமான நிலையம் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு வர முடிந்தது? இது பலராலும் சந்தேகத்துடனேயே பார்க்கப்படுகின்றது. இவர்கள் Operation Trust உளவு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டவர்களா என்கின்ற கோணத்திலும் சிந்திக்கவேண்டிய நிலையில்தான் இன்று புலம்பெயர் தமிழர்கள் இருக்கின்றார்கள்.

இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் கடந்த காலங்களில் தமிழ் தேசிய எதிரிகளாக வலம் வந்தவர்களின் செயற்பாடுகளை சற்று ஆழமாக நோக்குகின்ற பொழுது இந்தச் சந்தேகம் மேலும் வலுவடைகின்றது. ஐரோப்பியநாடுகளில்தமிழ்தேசியவாதிகளால் மேற்கொள்ளப்படுகின்ற சாதாரணமான ஒரு மே தின ஊர்வலத்திலேயே புகுந்து கலாட்டா பண்ணுகின்ற மாற்றுக் குழுவினர் அல்லது சிறிலங்காவின் கைக்கூலிகள், தற்பொழுது புலம்பெயர் தமிழர்கள் மேற்கொள்கின்ற போராட்டங்கள் தொடர்பில் பெரிய அளவில் அக்கறை காண்பிப்பதை காணமுடிவதில்லை. மகிந்தவிற்கு எதிராக புலம்பெயர் மண்ணில் ஒரு பெரிய வேள்வியே நடைபெற்று வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூட, இப்படிப்பட்டவர்கள் ஒரு புன்சிரிப்புடன் மௌனம் கடைப்பிடித்து வருவதை ஒரு வித்தியாசமான - அதேவேளை அவதானிக்கப்படவேண்டிய ஒரு நகர்வாகவே நான் பார்க்கின்றேன்.

14ஆம் பக்கம் பார்க்க...

**நிராஜ் டேவிட்**

# “மலையக” தேசிய அடையாளத்தின் - பரிணாமங்களும், பரிமாணங்களும்

கடந்தவாரத் தொடர்ச்சி...

ஆனால் மழைக் காலங்களில் கடக்க முடியாதவை. இலங்கையின் முதலாவது ஆளுநரான பிரெடெரிக் நோர்த் 1800ஆம் ஆண்டு முக்கிய பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் செய்தபோது, அவருடன் 160 பல்லக்கு சுமப்பவர்களும், 400 தொழிலாளர்களும், இரண்டு யானைகளும், ஆறு குதிரைகளும், ஐம்பது காலாட்படை வீரர்களும் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இத்தனையும் இன்றி அப்படிப்பட்ட பயணம் அவரால் சாத்தியப்படவில்லை. அதற்கு முன்னிருந்த போர்த்துக்கேய, ஒல்லாந்து ஆளுநர்கள் கூட தமது கட்டுப்பாட்டுக்குள்இருந்தகரையோரத் தளங்கள் அனைத்துக்குமே சென்று வந்ததில்லை. அப்பயணங்கள் அவ்வளவு இலகுவானதாக இருந்ததில்லை என்கிற உண்மையை நம்மால் உணர முடியும்.

1820ஆம் ஆண்டு லெப்டினன்ட் ஜெனரல் ஜோன் பிரேசர் (Lieut. General John Fraser) தான் இந்த பாதை அமைப்புப் பணிகளைத் தொடங்கியவர். 1841–1867க்கும் இடைப்பட்டக் காலத்தில் தான் இலங்கை முற்றிலும் இராணுவவாத நிர்வாகத்திலிருந்து வணிக முக்கியத்துவம் வாய்ந்த காலனியாக மாற்றப்பட்டது. அதன் பின்னர் 1820 முதல் 1867 வரையான மேஜர் ஸ்கின்னர் காலத்தில் சுமார் 5000 கி.மீ வரையான சாலைகளை அமைத்ததில் பெரும்பங்கு வகித்திருந்தார். பாதைகளை இணைக்கும் சில பாலங்களும் இவற்றில் அடங்கும்.

### முன்னோடி தொழிலாளர் படை

காடுகளையும் சதுப்பு நிலங்களையும் கடந்து, கடினமான மற்றும் வாழமுடியாத நிலப்பரப்புகளில் கட்டுமானத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு உள்ளூர் தொழிலாளர்கள் போதுமான அளவு கிடைக்கவில்லை. அதுமட்டுமன்றி அவர்கள் வேலை செய்யவும் விரும்பவில்லை. இதன் விளைவாக, காலனித்துவ அரசாங்கம் 1821ஆம் ஆண்டில் "முன்னோடி தொழிலாளர் படை" (Pioneer Labour Force (PLF) என்று அழைக்கப்படும் அரை இராணுவமயமாக்கப்பட்ட ஒரு துணைப்படையை அறிமுகப் படுத்தியது. இப்படையை உருவாக்கு வதன் மூலம் இந்தியாவில் இருந்து புலம்பெயர்வதை ஊக்குவிப்பதற்கான முன்முயற்சிகளை அறிமுகப் படுத்தியது.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக தென்னிந்தியத் தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதில் பி.எல்.எஃப் ஈடுபட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி (EIC) "முன்னோடிகள்" (Pioneers) என்று அழைக்கப்படும் ஒப்பந்த இந்தியத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியது. அதுவரை இப்படியான துணைப்படையாக காஃபிர்களையே கிழக்கிந்திய கம்பனி பேணியது. காஃபிர்கள் என்றால் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் இருந்த போர்த்துக்கேய குடியேற்றங் களிலிருந்துகொள்வனவுசெய்யப்பட்ட ஆபிரிக்க அடிமைகளையே குறிப்பர். அடிமை முறை ஒழிப்பின் பின்னர் காஃபிர்களை அடிமைகளாகவே பேண முடியாத நிலையில் பெருமளவு இந்திய கூலித்தொழிலாளர்களை அரை அடிமைகளாக பயன்படுத்த வாய்த்தார்கள். அடிமைகளின் இடத்தை இந்தியக் கொத்தடிமைகளைக் கொண்டு நிரப்பினார்கள் என்று நாம் கூற முடியும்.

முன்னோடி தொழிலாளர் படை (PLF) என்பது 19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் (இப்போது இலங்கை) பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் பணியாற்றுவதற்காக இது பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தால் (EIC) ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இந்திய தொழிலாளர்களின் குழுவாகும். பிரித்தானிய காலனித்துவ ஆட்சியை விரிவுபடுத்துவதற்கும் இலங்கையில் வர்த்தகத்தை நிறுவுவதற்கும் வழிவகுத்த வீதிகள், பாலங்கள், ரயில் பாதைகள், நீர்ப்பாசன கால்வாய்கள் மற்றும் பிற பொதுப் பணிகளில் இந்த PLF ஈடுபட்டது. பிரித்தானியப் பேரரசுக்கு மிகவும் இலாபகரமாக விளங்கிய இலங்கையின் தேயிலை தொழிற்துறையை நிறுவுவதில் PLF முக்கிய பங்கு வகித்தது.

இந்தியாவிலும், பிற காலனி நாடுகளில் உள்ள அதன் தோட்டங்களுக்கும் தொழிற் சாலைகளுக்கும் தொழிலாளர்களை வழங்க EIC பயன்படுத்திய ஒப்பந்த தொழிலாளர் முறையிலிருந்தே 1821 ஆம் ஆண்டு PLF உருவானது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, வழக்கமாக ஐந்துமுதல்ஏழுஆண்டுகள்வரை,ஒரு குறிப்பிட்ட தொழில் நிபந்தனைகளின் அடிப்படையில் வேலை செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டனர். காஃபிர் துருப்புகளுக்குப் பதிலாக "முன்னோடிகள்" என்று அழைக்கப்படும் ஒப்பந்த இந்திய தொழிலாளர்களை EIC பணியமர்த்தியது. முன்னோடிகள் முக்கியமாக தென்னிந்தியாவின் தாழ்த்தப்பட்ட சாதிகள் மற்றும் வகுப்பினரிடமிருந்து, குறிப்பாக தமிழ்நாடு மற்றும் கேரளாவில் இருந்தே ஈர்க்கப்பட்டனர். அவர்கள் தங்கள் மண்ணில் ஏற்பட்ட வறுமை, ஒடுக்குமுறைகளையும் பாகுபாடுகளையும் எதிர்கொண்ட வர்களாக இருந்தனர். அவர்கள் பெரும்பாலும் நேர்மையற்ற முகவர்களாலும் கங்காணிகளாலும் (கண்காணிப்பாளர்கள்) ஏமாற்றப் பட்டோ அல்லது வற்புறுத்தப்பட்டோ, அவர்கள் முழுமையாக புரிந்துகொள்ளாத அல்லது ஒப்புக் கொள்ளாத ஒப்பந்தங்களில் கையெழுத்திடச் செய்யப்பட்டனர்.

PLF இல் இருந்தவர்களின் வாழ்க்கை நிலைமைகள் கடுமை யானதாகவும் அதன் விளைவாக இலகுவாக சுரண்டக்கூடியதாகவும் இருந்தனர். அவர்கள் நீண்ட மணிநேர கடின உழைப்புக்கு உள்ளாக்கப்பட்டதுடன், போதிய உணவு, உடைகள் இன்றி, மோசமான வீடு மற்றும் சுகாதாரம் என்பவற்றின் காரணமாக அதிக இறப்பு விகிதத்தையும் எதிர்கொண்டார்கள். மலேரியா, கொலரா, வயிற்றுப்போக்கு போன்ற நோய்களால் அடிக்கடி பெருந்துயரை அனுபவிக்க வேண்டியிருந்தது. அதேபோல் இலங்கையின் சுதேசிய சிங்கள மக்களால் வெறுப்புக்கு உள்ளானார்கள். தமது நிலங்களை பறிக்க வந்தவர்களாக இம்மக்கள் பார்க்கப்பட்டார்கள். காலனித்துவ நிர்வாகத்தின் கீழ் PLFக்கு குறைந்தபட்ச சட்ட உரிமைகளோ அல்லது பாதுகாப்போ கூட இருக்கவில்லை. இதிலிருந்து தப்பிப்போக எத்தனிப்பவர்களுக்கு அபராதங்களும் தண்டனைகளும் வழங்கப்பட்டன. அவர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டன. அவர்களுக்கு கல்வி, சுகாதாரம் மற்றும் மத வசதிகள் ஆகியவை மறுக்கப்பட்டன.

ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்ப நாட்களில் திறமையான தொழிலாளர்களுக்கு பெரும் பற்றாக்குறை இருந்தது, மேலும் கிடைக்கக்கூடிய தொழிலாளர்கள் பெரும்பாலும் கடினமான மாவட்டங்களில் இத்தகைய பணிகளின் கஷ்டங்களை அனுபவிக்க தயாராக இல்லை. இதனால் தான் தென்னிந்தியாவில் இருந்து தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. 1867 ஆம் ஆண்டில் இந்த "முன்னோடிப் படை" 4000 பேரைக் கொண்ட வலுவான தொழிலாளர் துணைப் படையாக இருந்தது. அதன்பின்னர் எண்ணிக்கை படிப்படியாக குறைந்தது. 1942இல் 30,000 கி.மீ பிரதான வீதிகளும், மாட்டு வண்டில்கள் செல்லக்கூடிய பாதைகளும், 13,000 கி.மீ நீளமுள்ள இரயில் தண்டவாளப் பாதைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

நவீன இலங்கையின் உருவாக்கத்தில் இந்தியத் தொழிலாளர்களின் பங்கானது நிரந்தர வருமானமீட்டும் பெருந்தோட்டத் துறையில் மாத்திரமல்ல, நாடளாவிய உட்கட்டமைப்பின் உருவாக்கத்திலும் பெரும்பங்கு வகித்திருப்பதை நாம் உறுதியாக உணர வேண்டியிருக்கிறது. ஆறேழு தலைமுறைகளாக மலையகத்துக்கு வெளியில் வாழ்ந்துவரும் இவர்கள் நமது ஆய்வுக்கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும். ஆக இலங்கையில் இந்திய வம்சாவளியினர் ஆங்கிலேயர்களால் முதன் முதலில் கொண்டுவரப்பட்டது பெருந்தோட்டத்துறைக்கும் அல்ல. மத்திய மலைநாட்டுப் பகுதிக்கும் அல்ல. 1823இலும் அல்ல.

பிற்காலத்தில் கோப்பி, கொக்கோ, தேயிலை, இறப்பர் போன்ற பயிர்ச்செய்கைக்காக பெருவாரி தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்பட்டபோது பெரும்பாலும் மத்திய மலைநாட்டுப் பகுதியில் நிலைகொள்ளச் செய்யப் பட்டதாலும் அவ்விடங்களில் செறிவாக இருந்ததாலும் அங்கு தான் அச்சமூகத்துக்கான ஒன்றுபட்ட பண்பாட்டையும் அரசியலையும் கொண்டு நடத்த முடிந்தது. தொழிற்சங்கங்களின் வளர்ச்சியானது அரசியல் இயக்கமாக வடிவெடுத்ததிலிருந்து. சமய, கலாசார, உணவு, பழக்கவழக்க, மொழிப் பேணுகையும், அதனூடாக இந்திய அடியொற்றிய பண்பாட்டைப் பேணவும் ஈற்றில் அரசியல் அபிலாசைகளையும் உரிமைகளையும் கோரவும் முடிந்தது. எனவே அங்கே தான் இந்திய வம்சாவளியினருக்கான தனித்துவமான இலக்கியம் பிறக்கவும், பேணப்படவும், கொண்டிழுக்கவும் சாதகமானது.

ஆனால் இந்த மத்திய மலைநாட்டுக்கு வெளியில் வாழ்ந்த இந்திய வம்சாவளியினருக்கு இந்த வாய்ப்பு எட்டவில்லை. அவர்கள் சிங்களவர்கள் செறிவாக வாழ்ந்த பகுதிகளிலெல்லாம் உதிரிகளாகப் பரந்து வாழ நேரிட்டது. தோட்டப்பகுதிகளில் தமது சமயப் பண்பாட்டு அம்சங்களைப் பேண கிடைத்த சூழலும் வாய்ப்பும் இவர்களுக்கு அதே அளவில் இருக்கவில்லை. தமது தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதற்கான பொதுவான தொழிற்சங்கம் இருக்க வில்லை. தமது பொது அரசியல் அபிலாசைகளை கோருவதற்கான குறைந்தபட்ச அரசியல் தலைமை கூட இருக்கவில்லை. பல இடங்களில் தமது கல்வியைத் தொடர்வதற்கு தமிழ் பாடசாலைகள் கூட இருக்க வில்லை. இலங்கையின் தென் மாவட்டங்களிலும், வட மேல் மாகாணத்திலும், மேல் மாகாணத்தில் களுத்துறை, கம்பஹா போன்ற மாவட்டங்களிலும், ஊவா, சப்பிரகமுவா மாகாணங்களின் தென் பகுதிகளிலும் சிங்களப் பாடசாலையில் சிங்கள மொழியில் கல்வி கற்கும் தெரிவுக்கு தள்ளப்பட்டமையை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. அப்பிரதேசங்களில் இன்றைய தலைமுறையில் ஏராளமானோர் சிங்களவர்களை மணமுடித்து சிங்களவர்களாகவே ஆகிவிட்டமைக்கு யாரிடம் நோக முடியும். அது என்ன அவர்களின் விருப்பத் தெரிவா? அல்லது மாற்று தெரிவு அற்று நிர்ப்பந்திக்கப்பட்டதன் விளைவா?

அது மட்டுமன்றி பிரஜாவுரிமைச் சட்டங்களுக்கு பலியானவர்கள் இவர்களும் தான். மலைநாட்டுக்கு வெளியில் வாழ்ந்த இவர்களில் ஏராளமானவர்கள் நேரு - கொத்தலாவல, சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தங்களின் போது நாடு கடத்தப்பட்டார்கள். அச்சட்டங்கள் நாடு கடத்துவதற்காக பெயர் பட்டியல் இட்டு தேடித்தேடி திரிந்தபோது பல வருடங்களாக ஓடி ஓடி ஒளிந்து வாழ்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஈற்றில் முடியாத நிலையில் சரணடைந்து இந்தியா திரும்பியவர்கள் இருக்கிறார்கள். 1958, 1977, 1983 போன்ற கலவரங்களில் இவர்களும் தாக்கப்பட்டார்கள். கொல்லப்பட்டார்கள், சொத்துக்களை இழந்தார்கள். தமிழ் நாட்டுக்கு அகதிகளாக திரும்பிச் சென்றார்கள்.

இந்த எல்லா சந்தர்ப் பங்களிலும் பெருந்தோட்டப் பகுதிகளின் இன்னல்களுக்கு கிடைத்த கவன ஈர்ப்பு கூட இவர்களின் அவலங்களுக்குக் கிடைக்கவில்லை. அதன் காரணமாகவே பிற்காலத்தில் இவர்கள் பற்றிய பரவலான அறிதலும் இலங்கைச் சமூகத்தில் இல்லாது போனது. எப்படி மலையகப் பிரச்சினைகள் பற்றி ஏனைய இலங்கைச் சமூகத்தினருக்கு போய்ச் சேரவில்லை என்று காலாகாலமாக புலம்பிவந்தோமோ அதைவிட மோசமாக இந்திய வம்சாவளியினரின் இன்னொரு பெரும் பகுதியினர் குறித்து ஏனைய சமூகங்களுக்கு மாத்திரமல்ல மலைநாடு வாழ் சொந்த தொப்புள் கொடி உறவுகள் மத்தியில் கூட கவன ஈர்ப்பை பெற்றதில்லை என்கிற கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள எத்தனை பேர் இன்று தயார்?

**தொடரும்...**

**- என்.சரவணன் -**

# தமிழரசுக் கட்சியையும் பிளவுபடுத்தி சுமந்திரன் வெளியேறுவார் என்பது மக்கள் கருத்து. உண்மைதானா?

**தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

அடுத்ததாக விக்னேஸ்வரன் அவர்கள் தனியாக கட்சியை ஆரம்பித்து அதற்குத் தலைமை தாங்கவேண்டிய நிலைப்பாடு இருந்தாலும் அவர் பல தடவைகள் மாவை சேனாதிராஜாவின் தலைமையில் நாங்கள் ஒன்றுபட்டு வேலைசெய்வோம் என பிரேரித்திருக்கின்றார். பகிரங்கமாகவே அதனைப் பேசியிருக்கின்றார். நான் அதற்கு பதில் கூறவில்லை. ஆனால் அவ்வாறான சந்தர்ப்பம் அமைந்திருந்தால் நாங்கள் இணைந்து வேலை செய்வதற்கான மனப் பக்குவத்தினை நான் கொண்டிருந்தேன். ஆனாலும் அவ்வாறான சந்தர்ப்பம் வந்துசேரவில்லை. தமிழினத்தின் மக்களுக்காக நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு கூட்டுத்தலைமையின் கீழ் வேலை செய்வதற்கு நான் எப்போதும் ஆயத்தமாகவே இருக்கின்றேன்.

**கேள்வி : இன்று கட்சிக்குள் குழப்பம் விளைவிப்பவர் சுமந்திரன் அவர்கள் தான் என கூறப்படும் விடயம் தொடர்பில் உங்களது பதில் என்ன?**

பதில் : இவ்வாறான கேள்விகளுக்கு பதில் கூற நான் தலைவரல்ல. இவ்வாறானவற்றைக் கூறி குழப்பம் விளைவிக்க நான் தயாராகவும் இல்லை. நாங்கள் ஒற்றுமைக்காக என்னென்ன சந்தர்ப்பங்கள் இருக்கிறதோ அதைப் பின்பற்றி இனத்தின் விடுதலைக்காக உழைக்கக்கூடிய சந்தர்ப்பங்களைத் தான் உருவாக்கவேண்டும். உங்களுக்கான கேள்விகளுக்கு பொதுவெளியில் பதிலளித்துக் கொண்டிருந்தால் நாங்கள் ஒற்றுமையாகப் பயணிப்பது சாத்தியமாக இருக்காது. ஒவ்வொருவருடைய தனிப்பட்ட நடவடிக்கைகளினால் ஏற்படுகின்ற கருத்துக்கள், மோதல்கள் இவற்றைத் தீர்க்கின்ற வார்த்தைப் பிரயோகங்களும் செயற்பாடுகளும் ஒற்றுமையாக ஒரு இலட்சியத்தை அடைவதற்காக தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக நாங்கள் உழைப்பதற்கு முரண்பாடுகளைத் தவிர்த்துக்கொண்டு, இணக்கங்களை ஏற்படுத்தி அந்த அடிப்படையில் நாங்கள் ஒன்றுபட்டு செயற்படுவதற்கும் தமிழினத்தின் விடுதலைக்காக உழைப்பதற்கும் என்னென்ன வார்த்தைகளைப் பாவிக்கவேண்டுமோ, என்னென்ன செயற்பாடுகளைச் செய்யவேண்டுமோ, என்னென்ன அடிப்படையில் நாம் செயற்படவேண்டுமோ, ஒற்றுமைக்காகவும் இணக்கத்திற்காகவும், அதனடிப்படையில் இலட்சியத்தை அடைவதற்காகவும், இருக்கின்ற சந்தர்ப்பங்களை நாங்கள் சரியாகப் பயன்படுத்தவேண்டும். ஒவ்வொரு வரைப் பற்றியும் ஒவ்வொரு கட்சிகளைப் பற்றியும் நான் எந்த சந்தர்ப்பத்திலும் முரண்பாடுகளை ஏற்படுத்துகின்ற வார்த்தைப் பிரயோகங்களையோ செயற்பாடுகளையோ செய்வதற்கு நான் ஆயத்தமாக இல்லை.

**கேள்வி : உங்களது தலைமையிலான தமிழரசுக் கட்சி இல்லாமல் போவதை ஏற்கமுடியவில்லை. இது பற்றி?**

பதில் : இதுவொரு கற்பனை. உங்களது கற்பனைக்கு நான் பதில் வழங்கவேண்டிய தேவையில்லை. ஏனென்றால் தந்தை செல்வாவினால் தமிழரசுக் கட்சி ஆரம்பித்து அதனது வளர்ச்சியும் செயற்பாடுகளும் முக்கியத்துவம் பெறுகின்ற காலகட்டத்தில் தந்தை செல்வநாயகம் எங்களுக்குக் காட்டியிருக்கின்ற வழி காங்கிரஸ் கட்சியிலிருந்து திரு.ஜி.ஜி. பொன்னம்பலத்திடமிருந்து வேறுபட்டு தமிழரசுக் கட்சி ஆரம்பித்து 24 ஆண்டுகள் வளர்ச்சியடைந்ததன் பின்னரும் அந்த நேரத்தில் ஒரு புதிய அரசியல் அமைப்பு உருவாகவேண்டும் என்ற நிலையிலும் தமிழ் மக்களது போராட்டத்தில் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து செயற்படவேண்டும் என்ற கருத்திலும் தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வநாயகம் 24 ஆண்டுகளுக்குப் பிறகு திரு.ஜி.ஜி.பொன்னம்பலத்தின் இல்லம் சென்று நாங்கள் ஒற்றுமையாக செயற்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த அடிப்படையிலும் அப்போது நாங்கள் சிறைச்சாலையில் இருந்தாலும் அந்த விடயங்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டோம்.

வட்டுக்கோட்டையில் தமிழ் மக்கள் இழந்த சுதந்திரத்தை மீட்பதற்கு சுதந்திரத் தமிழரசு என 1947இல் உச்சரித்த தந்தை செல்வா, 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலே காங்கிரஸ் கட்சி உட்பட தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்படவேண்டிய தீர்மானத்தை எடுத்ததை நான் இப்போது நினைவுகூர விரும்புகின்றேன். தமிழர் விடுதலைக் கூட்டணியாக அந்தத் தலைவர் ஒற்றுமைப்பட்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்னிறுத்தி செயற்பட்ட விதத்தையும் நான் உங்களிடம் கூறிவைக்க விரும்புகின்றேன்.

ஆகையால் நாங்கள் கட்சிகளுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தக்கூடிய வார்த்தைப் பிரயோகங்களையோ அந்த வகையிலான செயற்பாடுகளையோ நாங்கள் தெரிந்தெடுக்காமல் ஒற்றுமைப்பட்டு தமிழர்களின் விடுதலைக்காக உழைக்கின்ற உத்திகளை தீர்மானங்களை முன்னெடுக்கவேண்டும்.

**கேள்வி : நீங்கள் கூறிய வரலாற்றின் அடிப்படையில் இன்று இந்தக் கூட்டணிகள் பிளவுபட்டிருக்கின்ற விடயங்கள் தமிழ் மக்களைப் பலவீனப்படுத்துவதாகவே அமைந்துள்ளது?**

பதில் : பிளவுகள் வந்துவிடக்கூடாது என்பதைத்தான் நான் கூறிவருகின்றேன். இவ்வாறான விடயங்களை நாங்கள் ஊடகங்களில் பொதுவெளியில் முக்கியத்துவம் வழங்கி பேசுவது தவறான விடயம். ஒற்றுமையாக இருக்கவேண்டும். இனத்தின் விடுதலைக்காக ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். இந்த அடிப்படையில் இருந்துதான் நாங்கள் பதில் வழங்கவேண்டும். வலிந்த பிளவுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளை நான் ஆதரவு வழங்க முடியாது. இவ்வாறான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசுவதற்கு நானும் விரும்புவதில்லை.

**கேள்வி : பிளவுபட்டிருந்தால் ஒற்றுமைப்படுவது எவ்வாறு?. இன்றைய உலகம் டிஜிட்டல் மயமாகியுள்ளது. அடுத்த தலைமுறைக்கு எமது செயற்பாடுகள் கடத்தப்படவேண்டும். 22 ஆசனங்களைக் கொண்டிருந்த கட்சி இன்று 10 இற்கு வந்துள்ளது. மக்கள் சரியான தலைமைத்துவம் தேவை என்பதைத்தான் எதிர்பார்க்கிறார்கள்?**

பதில் : நான் ஒற்றுமையையே வலியுறுத்துகிறேன். பிளவுகள் பிரச்சினைகள் இருக்குமானால் அவற்றைத் தவிர்த்து செயற்படவேண்டும். நாங்கள் தமிழ்த் தேசியத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள். தமிழினத்துக்காக நாங்கள் அனைவரும் சுயநிர்ணய அடிப்படையில் அரசியல் கட்டமைப்பை ஏற்படுத்த ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்கிற ரீதியில் தான் எனது செயற்பாடுகள் இருக்கும். பொதுவெளியில் மாவை சேனாதிராஜா ஆகிய நான் ஒற்றுமைக்காக மாத்திரம் தான் பேசுவேன். பிளவுபடுத்துகின்ற அல்லது சர்ச்சைக்குரிய விடயங்களைப் பற்றி ஒருபோதும் பேச மாட்டேன் என்பதையும் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

**நேர்காணல் : இரணியன்**

## தீவிரமடைந்துள்ள மழையுடன் கூடிய காலநிலை

மழையுடன் கூடிய காலநிலை தீவிரமடைந்துள்ள நிலையில் நாட்டின் பல பகுதிகளில் கடும் மழைவீழ்ச்சி தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக் கூடும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்கள், இரத்தினபுரி, களுத்துறை, நுவரெலியா, மாத்தளை மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் கடும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்

இந்தப் பகுதிகளில் சில இடங்களில் 100 மி.மீ.க்கு மேல் மழை பெய்யக்கூடும் என்று முன்னறிவிப்பு சுட்டிக்காட்டுகிறது.
இதனால் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும், வானிலை முன்னறிவிப்புகளை தொடர்ந்து தெரிந்துகொள்ள உள்ளூர் அதிகாரிகள் வழங்கும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு வானிலை ஆய்வு மையம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்கள் திடீர் வெள்ளம், நிலச்சரிவு மற்றும் வானிலை தொடர்பான பிற சம்பவங்களுக்கு தயாராக இருக்குமாறும், மின்னலினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**07ஆம் பக்கத் தொடர்ச்சி...**

தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முனையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு ஆட்சி காலத்திலும் இனவாத தலைமைகள் அல்லது பௌத்த தேரர்கள் பயமுறுத்தி முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டிருக்கிறார்களே தவிர ஒத்துழைப்பு வழங்க முனையவில்லை.

மஹிந்த ஆட்சிக்காலத்திலும் சரி நல்லாட்சி நிலவுகிற காலத்திலும் சரி இனவாத வாய்ப்பாடே பயன்படுத்தப்பட்டது. அதன் காரணமாகவே தமிழர்கள் 75 வருடங்கள் ஆகியும் தீர்வை பெற முடியவில்லை. தற்போது ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலின் கீழ் ஆண்டிகள் கூடி மடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதேயுண்மை.

இந்த சந்திப்புக்களின் போது இன்னும் சிலர் தெரிவித்த கருத்தையும் சுருக்கமாக பார்க்க வேண்டும். "புலம் பெயர்ந்த தமிழர்கள் என்ற அடையாளத்திலிருந்து விடுபட்டு புலம் பெயர் இலங்கையர் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்தும்படி எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்களும், இமைய மலைப்பிரகடனம் அமுல் படுத்தவேண்டியது அவசியமாக இருந்தாலும் அதற்கு சர்வசன வாக்கெடுப்பு முக்கியமென பேராசிரியர் பீரிசும், அண்மைகாலமாக புலிகள் இயக்கத்தை மீள உருவாக்கும் செயற்பாடுகளை புலம் பெயர் தமிழர்கள் சில நாடுகளில் இருந்துகொண்டு முன்னெடுத்து வருகிறார்கள் என சரத்வீரசேகராவும் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை காண்பதற்கு சர்வதேச கண்காணிப்புடனான வாக்கெடுப்பு அவசியம் என் புலம் பெயர் அமைப்புக்களும் கூறிவரும் நிலையில், எல்லோரும் ஏறி சறுக்கி வீழ்ந்த நிலை உலக தமிழர் பேரவைக்கும் வரக்கூடாது.

**பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்களது தொடர் நேர்காணல் அடுத்த இதழில் பிரசுரமாகும்.**

# உலக வலம்

## வீடற்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

கனடாவில் வீடற்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது. முக்கியமான நகரங்கள் பலவற்றில் வீடற்றவர்கள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு வீடற்றவர்கள் தற்காலிக முகாம்கள் அல்லது கூடாரங்களில் தங்கி இருப்பதாகவும் இவர்கள் பல்வேறு விபத்துக்களை சந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



குறிப்பாக முகாம்கள் மற்றும் கூடாரங்களில் தீ விபத்து சம்பவங்கள் பதிவாகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்பொழுது நாட்டில் நிலவிவரும் கடும் குளிரான காலநிலையின் மத்தியில் இந்த பிரச்சினை அதிகரித்துள்ளது. உரிய கட்டமைப்பை கொண்டிராத கூடாரங்கள் மற்றும் முகாம்களில் குளிரை கட்டுப்படுத்துவதற்காக மூட்டப்படும் தீ, விபத்துக்களாக மாறி விடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடா முழுவதும் சுமார் மூன்று லட்சம் பேர் வீடற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது. எனவே இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## "என் அடையாளத்தை போலியாகக் காட்டமாட்டேன்"



அமெரிக்காவில் அதிபர் தேர்தல் எதிர்வரும் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற உள்ளது. தற்போது எதிர்க்கட்சியாக இருக்கும் குடியரசு கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடுவதற்கு. அக்கட்சியின் தலைவர்களிடையே கடும் போட்டி உள்ளது. அந்த வகையில் அமெரிக்காவின் முன்னாள் அதிபரும் குடியரசு கட்சியை சேர்ந்தவருமான டொனால்ட் டிரம்ப், மீண்டும் தேர்தலில் போட்டியிட உள்ளதாக அறிவித்து, கட்சியினரிடையே ஆதரவு திரட்ட தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். அதேபோல் குடியரசு கட்சி வேட்பாளர் போட்டி களத்தில் தென் கரோலினா முன்னாள் கவர்னர் நிக்கி ஹாலே, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமி, புளோரிடா கவர்னர் ரான் டிசாண்டிங், நியூஜெர்சி முன்னாள் கவர்னர் கிறிஸ் கிறிஸ்டி ஆகியோரும் உள்ளனர்.

இந்நிலையில் விவேக் ராமசாமி அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பலரின் கேள்விகளுக்கு பதில் அளித்தார். அப்போது அவரிடம், "அமெரிக்காவை நிறுவியவர்களின் மதம் வேறு, உங்கள் மதம் வேறு, எனவே, நீங்கள் அமெரிக்க அதிபராக இருக்க முடியாது என்று கூறுபவர்களுக்கு உங்கள் பதில் என்ன?" என்று கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த விவேக் ராமசாமி, "நான் ஒரு இந்து. நான் என் அடையாளத்தை போலியாக காட்டமாட்டேன். இந்து மதமும், கிறிஸ்தவமும் பொதுவான ஒரே மதிப்பைப் பகிர்ந்து கொள்கின்றன.

எனது மத நம்பிக்கையின் அடிப்படையில், ஒவ்வொரு நபரும் ஒரு காரணத்திற்காக இங்கே இருக்கிறார்கள் என்றும், அந்தகாரணத்தைநிறைவேற்றுவது நமது தார்மீகக் கடமை என்றும் நான் நம்புகிறேன். ஏனென்றால் கடவுள் நம் ஒவ்வொருவருக்குள்ளும் வாழ்கிறார். கடவுள் நம் மூலம் பல்வேறு வழிகளில் செயல்பட்டாலும், நாம் அனைவரும் சமம். இந்த நாட்டில் கிறிஸ்தவத்தை பரப்புவதற்கு நான் சிறந்த ஜனாதிபதியாக இருப்பேனா? என்றால் இல்லை. அதற்கு நான் சரியான தேர்வாக இருக்க மாட்டேன். ஆனால் எந்த மதிப்புகளின் மீது அமெரிக்க நாடு நிறுவப்பட்டதோ, அவற்றின் பக்கம் நான் நிற்பேன்" என்று தெரிவித்துள்ளார்.

## ஜெனீவாவில் உலகளாவிய அகதிகள் மன்றம்

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில், உலகளாவிய அகதிகள் மன்றம் என்னும் உலகத் தலைவர்கள் பங்கேற்கும் சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ள நிலையில், அந்நிகழ்ச்சியில் பங்கேற்க இருந்த ஈரான் ஜனாதிபதி, திடீரென தனது பயணத்தை ரத்து செய்துவிட்டார்.

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில், அதாவது, டிசம்பர் 13ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை உலகளாவிய அகதிகள் மன்றம் என்னும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

உலகத் தலைவர்கள் பலர் பங்கேற்ற அந்த நிகழ்ச்சியில், ஈரான் சார்பில் கலந்துகொள்ளும் குழுவின் தலைவராக, ஈரான் ஜனாதிபதியான Ebrahim Raisi ஜெனீவா செல்ல திட்டமிட்டிருந்தார்.

ஆனால், அவர் திடீரென தனது பயணத்தை ரத்து செய்துவிட்டார். அதற்குக் காரணம், ஈரான் ஜனாதிபதியான Ebrahim Raisiயைக் கைது செய்ய அவரது எதிரணியைச் சேர்ந்த மூன்று பேர் சுவிஸ் அட்டர்னி ஜெனரலிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

ஆகவே, Ebrahim Raisi ஜெனீவா செல்லும் நிலையில் கைது செய்யப்படலாம் என்பதாலேயே, அவர் திடீரென தனது பயணத்தை ரத்துசெய்துவிட்டதாக கருதப்படுகிறது.

Ebrahim Raisi ஈரானின் டெஹ்ரான் மாகாண அரசின் துணைத் தலைவராக இருந்தபோது, இனப்படுகொலை மற்றும் மனித இனத்துக்கெதிரான குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியா சர்வதேச ஒப்பந்தம்



அடுத்த தலைமுறை ஸ்டெல்த் போர் விமானத்தை உருவாக்க ஜப்பான் மற்றும் இத்தாலியுடன் பிரித்தானியா சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது டோக்கியோவில் (வியாழக்கிழமை) ஒப்பந்தம் கையெழுத்தானது. இது போர் விமானத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டத்தை குறிக்கிறது என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு செயலர் கிராண்ட் ஷாப்ஸ், ஜப்பானிய தலைநகரில் தனது இத்தாலிய மற்றும் ஜப்பானிய சகாக்களான கைடோ க்ரோசெட்டோ மற்றும் மினோரு கிஹாரா ஆகியோருடன் ஆவணத்தில் கையெழுத்திட்டார். 'எங்கள் உலகின் முன்னணி போர் விமானத் திட்டம் உலகளாவிய பாதுகாப்பிற்கு முக்கியமானதாக இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் 2035ஆம் ஆண்டில் அந்தந்த விமானப் படைகளுக்கு புதிய ஜெட் விமானங்களை வழங்குவதில் நாங்கள் தொடர்ந்து முன்னேறுவோம்' என பாதுகாப்பு செயலர் கிராண்ட் ஷாப்ஸ், கூறினார்.

சூப்பர்சோனிக் திறன் மற்றும் அதிநவீன தொழில்நுட்பத்துடன் ராணுவ விமானங்களை உருவாக்குவதற்கான கூட்டு சர்வதேச முயற்சியை பிரதமர் ரிஷி சுனக் ஓராண்டுக்கு முன்பு அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனது கல்லறை இடத்தை அறிவித்த போப் பிரான்சிஸ்




"ரோம் நகரில் உள்ள சான்டா மரியா மேகியோர் பசிலிக்காவில் எனது உடல் அடக்கம் செய்யப்படவேண்டும் என விரும்புகிறேன்" என 87 வயதான போப் பிரான்சிஸ் கூறியிருப்பது பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. வத்திக்கான் அதிகாரபூர்வ ஊடக தகவலின்படி, இதுவரை போப் பதவி வகித்த 7 பேரின் கல்லறைகள் வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவிலேயே கட்டப்பட்டுள்ளன.

இந்நிலையில், அங்கு தனக்கான கல்லறை அமைக்கப்பட விரும்பாமல், சான்டா மரியா மேகியர் (santa maria maggiore) பசிலிக்காவில் தனது கல்லறை அமைக்கப்படவேண்டும் என தான் விரும்புவதாக போப் பிரான்சிஸ் கூறியுள்ளார். ரோமில் உள்ள நான்கு போப்பாண்டவர் தேவாலயங்களில் சான்டா மரியா மேகியோர் தேவாலயமும் (பசிலிக்கா) ஒன்று. இந்த தேவாலயத்துக்கும் தனக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக உணர்வதாகவும் கூறியுள்ளார். தான் போப் பதவியில் அமர்வதற்கு முன்னர் ரோம் நகருக்கு செல்கிறபோதெல்லாம், வார இறுதி நாட்களில் சான்டா மரியா மேகியோர் தேவாலயத்துக்கு செல்வதை வழக்கமாக கொண்டிருந்ததாகவும் இதன்போது தெரிவித்தார்.

2013இல் இவர் போப் பதவியை அடைந்த பின்னரும் இந்த தேவாலயத்துக்கு சென்று வழிபட்டுள்ளதாகவும், தனக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பின்னரும் கூட சான்டா மரியா மேகியோர் தேவாலயத்தில் வழிபட்டதாகவும் போப் பிரான்சிஸ் குறிப்பிட்டார். நூறாண்டுகளுக்கு முன்னர் போப் 8ஆம் லியோ 1903இல் வத்திக்கான் செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவில் அல்லாமல், நகருக்கு வெளியே, ரோமில் உள்ள செய்ன்ட் ஜோன் பசிலிக்காவில் அடக்கம் செய்யப்பட்டார். அதேவேளை போப் பிரான்சிஸின் கல்லறை பற்றிய அறிவிப்பின்படி, நூறாண்டுகளுக்குப் பின்னர், வத்திக்கான் நகருக்கு வெளியே அடக்கம் செய்யப்படும் முதல் போப்பாண்டவர் இவர் என்பது வரலாற்றுப் பதிவாகிறது.

## தொடர் நிலநடுக்கங்களில் சிக்கித்தவிக்கும் ஆப்கானிஸ்தான்



தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம் பதிவாகியுள்ள நிலையில், செவ்வாய்க்கிழமை காலை 5.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து மூன்றாவது நாளாக (டிசம்பர் 12) 5.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. (டிச.11) காலை 7.35 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

120 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.2 அலகுகளாகப் பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் கூறியுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் உயிர்சேதமோ அல்லது பொருட்சேதமோ ஏற்பட்டதாக எந்தவித தகவலும் இல்லை.

அதற்கு முன்னதாக, கடந்த அக்டோபர் 7-ஆம் திகதி ஆப்கானிஸ்தானின் ஹெராத் பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சிக்கி 4,000-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன், பல்லாயிரக்கணக்கானோர் படுகாய மடைந்தனர்.

இதனையடுத்து அக்டோபர் 13, 15 மற்றும் நவம்பர் 21-ஆம் திகதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டது. கடந்த (ஞாயிற்றுக்கிழமை) 4.8 ரிக்டர் அளவிலும், (திங்கள்கிழமை) 4.4 ரிக்டர் அளவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை வறுமை மிகுந்து காணப்படும் ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்த நாட்களில் தொடர்ந்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருவதால் ஆப்கானிஸ்தான் மக்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

# வவுனியா பிரதேச கலாசார விழாவில் ஒன்பது பேருக்கு கலாநேத்ரா விருது




வவவுனியா பிரதேச செயலகமும், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், வவுனியா பிரதேச கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த வவுனியா பிரதேச கலாசார பெருவிழா *(14.12.2023)* அன்று மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வவுனியா பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கிய துறை சார்ந்த ஒன்பது பேருக்கு கலாநேத்ரா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அந்தவகையில் வவுனியா பிரதேசத்தில் கலைத்துறையில் கவிதை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கிவரும் கலாபூசணம் நாகலிங்கம் தியாகராஜா அவர்களிற்கு கவிதை துறைக்கான கலாநேத்ரா விருதும், கலாபூசணம் செந்தில்மதி பரமசிவராஜா அவர்கட்கு வாத்திய இசைக்கான கலாநேத்ரா விருதும், சிதம்பரப்பிள்ளை வரதராஜன் அவர்களுக்கு இயலுக்கான கலாநேத்ரா விருதும், கந்தையா ஸ்ரீ கந்தவேள் அவர்களுக்கு நாடக எழுத்துருக்கான கலாநேத்ரா விருதும், வவுனியா பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கிவரும் பண்டிதர் வீரசிங்கம் பிரதீபன் அவர்களுக்கு கட்டுரைக்கான கலாநேத்ரா விருதும், சோமரட்ணம் ஜெயச்சந்திரன் அவர்களுக்கு மெல்லிசைக்கான கலாநேத்ரா விருதும், விஷ்ணுராஜ் விஜயகுமார் அவர்களுக்கு நாடக இலக்கியத்துக்கான கலாநேத்ரா விருதும், சர்மினி டனிஸ்கரன் அவர்களுக்கு நடனத்துக்கான கலாநேத்ரா விருதும், பாலநாதன் சதீசன் அவர்களுக்கு ஊடகத்துறைக்கான கலாநேத்ரா விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

**உலகின் மிக உயரமான நபரும் உலகின் மிகக் குட்டையான மனிதரும் நேரிக் சந்திக்கொண்ட காணொளி ஒன்று கின்னஸ் உலக சாதனைகள் என்ற கணக்கில் பதிவிடப்பட்டுள்ளது.**

**இதன்படி. துருக்கி நாட்டை சேர்ந்த சுல்தான் கோசென் 8 அடி. 3 அங்குல உயரம் கொண்டவர். 2009 இல் அவர் உலகின் மிக உயரமான மனிதர் ஆனார்.**

**நேபாளத்தைச் சேர்ந்த சந்திரா பகதூர் டாங்கி. 251 சென்டிமீட்டர்கள் மற்றும் வெறும் 32 பவுண்டுகள் எடை கொண்டவர். 2014 இல் லண்டனில் நடந்த ஒரு நிகழ்வில் இருவரும் ஒரு தனித்துவமான புகைப்பட ஷூட்டிற்காக சந்தித்தனர்.**







இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 17.12.2023 அன்று வெளியிடப்பட்டது.